MINISTRY OF MASS MEDIA AND INFORMATION

SELACINE
TELEVISION INSTITUTE




# වාර්ෂික වාර්තාව ஆண்டறிக்கை ANNUAL REPORT

கௌரவ வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சர்,
வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு
கொழும்பு-05

கௌரவ அமைச்சரே,

ஆண்டறிக்கை-2012

1971 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 14(1)பிரிவுக்கமைய 2011 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை செலசினே தொலைக்காட்சி நிறுவனம் சார்பாக என்னால் இத்தால் சமர்ப்பிக்கப்படுகின்றது.

பிரதீப் எதிரிசிங்ஹ
தலைவர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்
கொழும்பு-07

SELACINE TELEVISION INSTITUTE

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நோக்கம் ,பணி,குறிக்கோள் | 03 |
| தலைவரின் மதிப்புரை | 05 |
| பொது முகாமையாளரின் செய்தி | 06 |
| நிர்வாக கட்டமைப்பு 2011 மற்றும் தொடர்பு கொள்ளும் விபரங்கள் | 07 |
| நிறுவனத்தின் தகவல்கள் | 08-18 |
| நிதியறிக்கைக்கான குறிப்புகள் | 20-23 |
| வருமான அறிக்கை | 24 |
| ஐந்தொகை | 25 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 26 |
| நிதியறிக்கைக்கான குறிப்புக்கள் | 28-37 |
| 2012 ஆம் ஆண்டின் நிதி தொழிற்பாடுகள்தொடர்பான கணக்காய்வாளரின் கருத்துக்கள் | 39-45 |
| கணக்காய்வாளர் அறிக்கைக்கான பதில்கள் 2012 | 46-50 |

## நோக்கம்

அரச இயந்திரத்தின் அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டு மற்றும் அனைத்து வியாபாரத்துறைகளினதும் வளர்ச்சியினை படைப்பாற்றலுடன் விளம்பரப்படுத்துவதன் மூலம் விளம்பரத்துறையின் முன்னோடியாதல்.

## பணி

நிபுணத்துவத்துக்கு அப்பாற்பட்ட படைப்பாற்றல் மிக்க மனிதவள உதவியுடன் படைப்பாற்றல் மிக்க, திட்டமிட்ட மற்றும் உயர் மட்டத்திலான தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அரச நிறுவனங்களுக்காக கட்புல, செவிபுல தொடர்பாடல் மற்றும் வேறு படைப்பாற்றல் மிக்க பிரச்சார சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் அபிவிருத்தி, சமூக மற்றும் அரசியல் அபிவிருத்திக்காக தொடர்ச்சியாக பங்களிப்பு வழங்குதல்

## நோக்கம்

வியாபார அபிவிருத்தி

- நவீன சாவால்மிக்க வியாபார மற்றும் புதிய தொழில்நுட்ப முறைகளை உள்வாங்குதல்
- வாடிக்கையாளர்களின் ஆர்வத்தினை அதிகரிப்பதற்காக கவனம் செலுத்துதல்

## வேறு

- நிறுவன காலாசாரத்தினை ஸ்தாபித்தல்
- அனைத்து மனித வளங்களையும் அபிவிருத்தி செய்தல்



## தலைவரின் மதிப்புரை

செலசினே நிறுவனத்தின் தலைவர் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட பின்னர் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டறிக்கையை வெளியிடும்பணி2009 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையிலிருந்து தொடர்ச்சியாக வெளியிடப்படுவதுடன் 2012 ஆம் ஆண்டின் ஆண்டரிக்கைக்கான செய்தியை அளிப்பதானது நான் பெற்ற பாக்கியமாகவே கருதுகின்றேன்.

கடந்த 03 வருட காலப்பகுதியில் நிறுவனம் பயணத்தில் மிகவும் செயல்திறன்மிக்க காலப்பகுதியை உருவாக்குவதற்கு கிடைத்தமையானது எனக்கு மிகவும் மகிழ்ச்சியான விடயமாகும்.நிறுவனத்தின் வசதிகளை மேம்படுத்தியமையானது செயல்திறன் மிக்க நிர்வாகக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கு காரணியாக அமைந்தது.

கணக்கியல் நடவடிக்கைகளை சரியாகவும் விரைவாகவும் மேற்கொள்வதற்கான தேவையான முறைகளை ஏற்படுத்துவதன் மூலம் சரியான பலன்களை பெற்றுக்கொள்ள முடிந்தது. 2011 நிதியறிக்கை உட்பட 2012 ஆம் ஆண்டின் நிதியறிக்கை தொடர்பாக கணக்காய்வாளரின் கருத்துக்கள் உயர்மட்டத்தில் அமைந்திருந்தமை அதற்கான சரியான உதாரணமாகும்.

2012 ஆம் வருடத்தில் மனித வள ஆலோசனைக் சேவை மூலம் நிறுவனத்தின் ஊழியர்களுக்கான பயனுள்ள திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டது பாராட்டுக்குறியது. அதன்படி நுவரெலியாவில் இடம்பெற்ற Gung Ho குழு செயற்பாட்டின் மூலம் ஊழியர்களுக்கிடையில் குழுவாக செயற்படும் ஆற்றலை மேம்படுத்தியது உட்பட தனித்தனியாக ஒவ்வொரு ஊழியர்களுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்ட ஆலோசனைகளும் நிறுவனத்தின் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கு சரியான பின்புலமாக அமைந்தது என்பது எனது கருத்தாகும்.

பல்வேறு மட்டங்களில் சேவையிலுள்ள ஊழியர்களுக்கு அவர்களது திறன் மேம்பாட்டுக்கான பாடநெறிகளை பயி லும் வாய்ப்பினை ஏற்படுத்தியமை இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டமை முக்கியமான விடயமாகும்.

ஊடக தயாரிப்புக்களின் தரத்தினை மேம்படுத்துவதற்காக அதிநவீன வசதிகள் கொண்ட ஒளிப்படக்கருவிகள் மற்றும் செம்மைப்படுத்தல் உபகரணங்களை தயாரிப்புப்பிரிவிற்கு பெற்றுக்கொடுத்தது மட்டுமல்லாது அப்பிரிவுக்காக தொழிற்திறன் கொண்ட கலைஞர்களை இணைத்தமையும் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது. அதன் பயனாக உயர் தரத்திலான நிகழ்கால நிகழ்ச்சிகள் பலவற்றை உருவாக்க முடிந்தமை மட்டுமல்லாது இவ்வருடத்தில் ஒளிபரப்பான எழுத்துக்கள் கோபிப்பதில்லை தொலைக்காட்சி நாடகம் ரைகம் டெலி விருது வழங்கும் விழாவில் நடுவர் குழுவின் விசேட விருதினை பெற்றுக்கொண்டமை எமது நிறுவனத்திற்கு கிடைத்த கௌரவமாகவே கருதுகின்றேன். விளம்பரத் தயாரிப்பில் சிறப்புமிக்க இடத்தினை பெற்றுக்கொள்ள எமது நிறுவனத்திற்கு முடிந்துள்ளது.லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கு தினமும் பெற்றுக்கொடுக்கப்படும் பத்திரிகை விளம்பரங்களில் அதிகளவான விளம்பரங்களை பெற்றுக்கொடுக்கும் நிறுவனமாக எமது நிறுவனம் பெயரிடப்பட்டிருப்பது எமக்கு மேலும் மகிழ்சியளிக்கும் விடயமாகும்.

2011 வருடத்துடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டின் வருமானம் 57 மில்லியன் ரூபாவினால் வளர்ச்சியடைந்துள்ளதுடன் சதவீதமாக 15% அதிகரிப்பாகும். இவ்வருடத்தின் முழு வருமானம் 437 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்டது என்பதுடன் அது இதுவரையான காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட அதிகூடிய வருமானமாக கொள்ள முடியும்.அதிக வருமானமுடைய இலக்குகளை நோக்கி பயணித்தன் மூலம் இவ்வாறான வளர்ச்சியினை பெற்றுக்கொள்ள முடிந்தமை பாராட்டுக்குறிய விடயமாகும்.

இவ்வனைத்து வெற்றிகளுடனும் எமது ஒரே கடமையானது அரச அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான அனைத்து விடயங்களையும் பொது மக்களிடத்தில் கொண்டு செல்வதாகும். அதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற தயாராகவுள்ள செலசினே நிறுவனத்தினை எதிர்காலத்திலும் மிகச்சிறந்த நிலையில் நடாத்திச் செலவதற்கான அடித்தளத்தினை இடுவது எமது யுகத்தின் கடமையாதலினால் அதனை மிகச்சிறந்த முறையில் மேற்கொள்வது எமது அனைவரதும் கடமையாக இருக்க வேண்டும்.

**பிரதீப் எதிரிசிங்ஹ**
**தலைவர்**

SELACINE TELEVISION INSTITUTE

## பொது முகாமையாளரின் செய்தி



03 தசாப்த காலமாக மேற்கொண்ட ஊடக சேவையினை மேலும் பல தசாப்தகாலத்திற்கு முன்னோக்கி கொண்டு செல்லும் எதிர்பார்ப்புடன் செலசினே நிறுவனம் மிகவும் சிறந்த நிலையுள்ள காலகட்டத்தில் அதாவது 2012 ஆம் ஆண்டினுள் நிறைவேற்றிய பொறுப்புக்களை தெரியப்படுத்துவதை எனது கடமையாக எண்ணுகின்றேன்..

கட்புல செவிபுல தயாரிப்புத்துறையில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் நிபுணத்துவம் மற்றும் திறன்களை வெளிக்கொணரும் நோக்குடன் மனிதவள ஆலோசனை சேவை ஊடக மேற்கொள்ளப்பட்ட Gung HO கூட்டுச் செயற்பாடு ஊழியர்களுக்கு மகிழ்ச்சியினை பெற்றுக்கொடுத்தது. அத்துடன் அத்துடன் அவர்களது செயல்திறனை மேம்படுத்துவதற்கான காரணியாக அமைந்தது. அத்துடன் திறன் மேம்பாட்டுக்கான பாடநெறிகளை பயில்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலம் ஊழியர்களின் எதிர்கால நலனையும் நிறுவனத்தின் செயல்தினை மேம்படுத்துவதற்கான அடித்தளமாக அமைந்தது. உயர் தரத்திலான ஊடக தயாரிப்புக்களை உருவாக்குவதற்கு தேவையான அதிநவீன கெமராக்கள் மற்றும் செம்மைப்படுத்தல் இயந்திரங்கள் நிறுவனத்தினால் 2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்ததன் மூலம் எதிர்காலத்தில் மிகச்சிறந்த பலன்களை பெற்றுக்கொள்ள முடியுமென்பது திண்ணம்.

எமது தயாரிப்புப்பிரிவினால் தயாரிக்கப்பட்ட எழுத்துக்கள் கோபிப்பதில்லை தொலைக்காட்சி நாடகம் ரைகம் டெலி விருதுகள் 2012 இல் நடுவர் குழுவின் விசேட விருதைப் பெற்றுக்கொண்டமை செலசினே நிறுவன வரலாற்றில் மிக முக்கியமான மைற்கல்லாக கொள்ள முடியும்.

தினசரி பத்திரிகைகளுக்கான விளம்பர வழங்கலில் 2012 ஆம் ஆண்டில் முன்னணி இடத்தினை பெற்றுக்கொண்டமை மகிழ்ச்சியான விடயமாகும். நிறுவனத்தின் நிதி கணக்கியல் விடயங்களில் செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் மிக முக்கிய சாட்சியாக 2012 ஆம் ஆண்டின் நிதியறிக்கை தொடர்பான கணக்காய்வாளரின் கருத்தினை குறிப்பிட முடியும்.அதாவது அடுத்தடுத்து இரு தடவை "நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகள் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கியல் தரங்களுக்கமைய உண்மையானதும் சாதாரணமான வெளிப்படுத்தல்களை காட்டுகிறது என்பதே கணக்காய்வாளரின் கருத்தாகும்

450 மில்லியன் ரூபா இலக்கினைக் கொண்டு செயலாற்றிய விற்பனைப்பிரிவு இவ்வருடத்தில் 437 மில்லின் ரூபாய்க்கு மேற்பட்ட வருமானத்தினை பெற்றுக்கொண்டமை மூலம் விற்பனை மற்றும் சேவைப் பிரிவின் நிபுணத்துவம் வெளிக்காட்டப்படுகின்றது. 2011 ஆம் வருடத்துடன் ஒப்பிடும் போது இது 57 மில்லியன் ரூபா அதிகரிப்பை சதவீதமாக 15% அதிகரிப்பைக் காட்டுகின்றது.

ஊழியர் நலன்புரிக்காக நலன்புரி சங்கத்தினால் பாராட்டத்தக்க சேவை மேற்கொள்ளப்படுகின்றது. குறைந்த வட்டி வீதித்தில் கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல், மரண சகாய நிதி, ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புத்தகங்கள் வழங்குதல் உட்பட பணியிலிருந்து விலகும் ஊழியர்களுக்கு கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுத்தல் போன்ற பல்வேறு நலத்திட்டங்களை 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

**ரன்ஜன் ஏக்கநாயக்க**
**பொது முகாமையாளர் (பதில்)**

## நிர்வாகக் கட்டமைப்பு 2012

**சிரேஷ்ட முகாமைத்துவம்**

பிரதீப் எதிரிசிங்ஹ- தலைவர்

உபுல் பல்லேகங்கொட - பொது முகாமையாளர் (2012.09.30 வரை)
ரன்ஜன் ஏக்கநாயக்க - பொது முகாமையாளா( பதில்) (2012.10.30 இலிருந்து)

**முகாமைத்துவம்**

புஷ்பா பமுணுஆராச்சி - முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்)

சுனந்த வீரசிங்க - முகாமையாளர் (தயாரிப்பு)

தம்மிக்க ஜீரசிங்ஹ - வாடிக்கையாளர் சேவை பணிப்பாளர்

நலீன் அலஹகோக் - முகாமையாளர் (ஊடகப்பிரிவு)

கே.டீ.ஜே. த லசால் - முகாமையாளர் (நிதி)

சுஜித் புஷ்பகுமார - முகாமையாளர் (பதில்) (வரைகலைப்பிரிவு)

**கணக்காய்வு-**

அரச கணக்காய்வு திணைக்களம்

## தொடர்பு விபரங்கள்

**முகவரி**
இலங்கை வானொலி பயிற்சிக் கட்டிடம், சுதந்திர சதுக்கம், கொழும்பு 07

**தொலைபேசி**
011 2688744 /011 5767979/ 011 5235480

**தொலைநகல்**
011 2688745

மின்னஞ்சல்
selacine@gmail.com

இணையத்தளம்
www.selacine.lk

TELEVISION INSTITUTE

# நிறுவனத் தகவல்கள்

**பெயர் : செலசினே தொலைக்காட்சி நிறுவனம்**

## சட்டக்கட்டமைப்பு மற்றும் கடந்தகால நிலைமை

- 1982 பெப்ரவரி 01 ஆம் திகதி திட்டங்களை செயற்படுத்தும் அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1982-1989 வரை காணி,நீர்ப்பாசன மற்றும் மகாவெலி அபிவிருத்தி அமைச்சின் கீழிருந்த அரச மரக்கூட்டுத்தாபனத்தின் மனித மற்றும் நிதி வளத்தின் கீழ் மகாவெலி உடனடி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக இலங்கை மக்களை தெளிவுபடுத்தும் பணியினை மேற்கொண்டது.
- 1989 ஜனசவிய நிகழ்ச்சித்திட்டத்தினை விளம்பரப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டது
- 1989.08.19 ஆம் திகதியுடைய 832/15 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் செலசினே நிறுவனம் இளைஞர் விவகாரங்கள்,விளையாட்டு மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. (இது நிறுவனம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதல் சுவீகரித்தலாகும்)
- 1997.06.09 ஆம் திகதியுடைய 979/2 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தபால், தொலைத்தொடர்புகள் மற்றும் ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 2001.12.20 ஆம் திகதியுடைய 1215/14 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மக்கள் தொடர்பாடல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 2004.04.28 ஆம் திகதியுடைய 1338/9 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தகவல் மற்றும் ஊடக அமைச்சின் கீழுள்ள நிறுவனமாக பெயரிடப்பட்டது.
- 2005.12.08 ஆம் திகதியுடைய 1422/22 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஊடக மற்றும் தகவல் அமைச்சின் கீழ் நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டது.
- 2007 07 ஆம் இலக்கமுடைய நிறுவன சட்டத்தின் உள்ளடக்கங்களுக்கு அமைவாக பூரண அரசுடைமையான பொது நிறுவனமாக மாற்றுவதற்காக அமைச்சரவைக்கு 2008.03.26 ஆம் திகதி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

## நிறுவனத்தின் பொறுப்புக்கள்

- அரசின் ஊடக விளம்பரப்படுத்தல் மற்றும் தயாரிப்பு நிறுவனமாக செயற்படுதல்
- 2005.05.16 ஆம் திகதி 1380/15 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கீழ் காட்டப்பட்டுள்ள பணிகள் நிறுவனத்தின் விடயப்பரப்பில் உள்ளடக்கப்பட்டது.
  01. அச்சு/இலத்திரனியல் விளம்பர தயாரிப்பு
  02. அரசின் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்தும் பிரச்சாரப்பணிகள்
  03. அரச பிரச்சார நிகழ்ச்சிகளை தயாரித்தல்
- 2008.12.02 ஆம் திகதியுடைய வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சர் கடிதம் சம்பந்தப்பட்ட பரீட்சிப்பின் பின்னர் 2008.12.24 ஆம் திகதியுடைய 08/2253/338/043 இலக்கமுடைய அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழுள்ள நிறுவனங்களின் அனைத்து விளம்பரங்கள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகளை செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளவதை கட்டாயமாக்கும் அனுமதியை பெற்றுக்கொடுத்தது.
- தொலைக்காட்சி ஆவண நிகழ்ச்சிகள்,வானொலி நிகழ்ச்சிகள் உட்பட தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரங்கள் போன்ற கட்புல செவிபுல தயாரிப்புக்களை மேற்கொள்ளுதல்
- பத்திரிகை விளம்பரத்தயாரிப்பு உட்பட விளம்பரங்னை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் ஒழுங்குபடுத்தல்.
- நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் அச்சு வேலைகள்

**2012 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றிகள்**

- செலசினே நிறுவனத்தின் தயாரிப்பான எழுத்துக்கள் கோபிப்பதில்லை தொலைக்காட்சி நாடகத்திற்கு 2012 ரைகம் தொலைக்காட்சி விழாவில் நடுவர் குழுவின் விசேட விருது வழங்கப்பட்டது.
- தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் சாதாரணமான வெளிப்படுத்தல்களை காட்டுகிறது என்ற 2012 நிதியறிக்கை தொடர்பாக கணக்காய்வாளரின் கருத்து செலசினே நிறுவனம் பெற்ற மற்றுமொரு வெற்றியாகும்.
- “2012 டிசம்பர் 31 திகதிக்கு செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் நிதிநிலைமை மற்றும் அன்றைய தினத்தின் முடிவடைந்த வருடத்திற்கான நிதி தொழிற்பாடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கியல் தரங்களுக்கமைவாக உண்மையானதும் சாதாரணமான வெளிப்படுத்தல்களை காட்டுகிறது என்பது எனது கருத்தாகும்.”

  கணக்காய்வாளர்

**அன்றும் இன்றும் மக்கள் மனம் வென்ற செலசினே படைப்புக்கள்**

● **போலோ கெபின் திய கெனா வகய்** (ஆவணம்) ● **மணிமேகலா** (ஆவணம்) ● **சப்த சமாதி** (ஆவணம்) ● **நிவசின் பெஹேர நிவசக** (ஆவணம்) ● **ஹிம ஹன்சி** (தொலைக்காட்சி நாடகம்) ● **2001 கேசே யமுத** (ஆவணம்) ● **கேபல் பிரித்தீமே கிரம** (ஆவணம்) ● **பத்தும் தஹரக்** (ஆவணம்) **வேவ் கமக கதாவக** (ஆவணம்) ● **கலு தியமன்தி கதாவ** (ஆவணம்) ● **56 தருவோ** (ஆவணம்) ● **சியவசக பியசடஹன்** (ஆவணம்) ● **அபே உறுமய (ஆவணம்)** ●**இலங்கை கண்தான சங்கம்** (ஆவணம்) ● **சங்கர்தனயே பியசடஹன்** (ஆவணம்) ● **ரேகவரணயே புரோகாமியா** (ஆவணம்) ● **ராக ரங்கன** (ஆவணம்) ● **மேஹேவர** (ஆவணம்) ● **அருண உதாவிதோ** (ஆவணம்) ● **கமே கொஹின்** (ஆவணம்) ● **அசிரிமத் ஆருத பொல்** (ஆவணம்) ● **தின 145க கதாவக்** (ஆவணம்) ● **எழுத்துக்கள் கோபிப்பதில்லை** (தொலைக்காட்சி நாடகம்) ● **ஜீவித்த ரோதே** (நாடகம்) ● **மாவத்தே அபி** (ஆவணம்) ● **ஜலய ஜீவித்தயே உல்பதய் எய மது பரபுரே தயாதயய்** (ஆவணம்) ● **பெரவத** (ஆவணம்) ● **வனவத** (ஆவணம்)● **தே தல்லக அசிரிய** (சஞ்சிகை நிகழ்ச்சி) ● **சிபிரி கெதரின் சுபிரி பாடமக்** (ஆவண நிகழ்ச்சி) ● **சுவ ஒசுவகி எவிதிமு சகி (ஆவணம்)** ● **தான்ய சங்ரக்ஷனய** (ஆவணம்) ● **தேயட சவிய மவ் பதவிய** (ஆவணம்) ● **சீகிரிய ஜல கலமனாகரனய-சிங்களம்/ஆங்கிலம்** (ஆவணம்) ● **வேவக மஹிம பல ஜல கத பிரிலா** (ஆவணம்) ● **சமனல வெவ யபஸ்** (ஆவணம்) ● **போ நொவன ரோக போவேன்னே எய்** (ஆவணம்) ● **பிசோ கொடுவ-சிங்களம் / ஆங்கிலம்** (ஆவணம்) ● **சதிபொல அசிரிய** (ஆவணம்) ● **ஜேதவத தாகெபே அதிகிரீம் தாக்ஷனய ஆங்கிலம் / சிங்களம்** (ஆவணம்) ● **நிம் வலலு புலுல் கல அபே குவன** (ஆவணம்) ● **ஸ்ரீ லங்காவே பெரனி பஹன்-சிங்களம் / ஆங்கிலம்** (ஆவணம்) ● **அபே பிரவாஹனயே ஹெட தவச** (ஆவணம்) ● **அசிரிமத் விகிரண** (ஆவணம்) ● **ஹெட வெனுவேன் அத** (விளம்பரம்) ● **தக்ஷின அதிவேக வீதி** (விளம்பரம்) ● **ஜன லேகன ஹா சங்யாலேகன** (விளம்பரம்)

## 2012 ஆம் ஆண்டில் 30 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களின் விசேட நிகழ்வுகள்

- 2012 பெப்ரவரி 17 ஆம் திகதி சர்வ ராத்திரிக பரித்திரான தர்ம போதனை மற்றும் மறுநாள் காலை சங்ககத தக்ஷினாவ சமய நிகழ்வு நிறுவன வளாகத்தில் இடம்பெற்றது. அன்றைய தினம் பிரித் போதனை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஊடாக ஒளிபரப்பப்பட்டது.
- 30 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு விசேட பத்திரிகை மலர் லேக் ஹவுஸ் உட்பட மற்றைய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது.
- செலசினே நிறுவனம் மற்றும் ஊழியர் நலன்புரி சங்கத்தின் பங்களிப்பில் விசேட தேவையுடையோருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டது.
- செலசினே நிறுவனத்தின் அனுசரனையுடன் ஊழியர் நலன்புரி சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு 2012 ஜூலை மாதம் 08ஆம் திகதி நாள் முழுவதும் நிறுவன வளாகத்தில் இடம் பெற்றது.

## 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள்

- மனிதவள ஆலோசனை சேவையின் கீழ் “தொழில்முயலுனர் கலாச்சாரம்” பெயரில் விசேட கருத்தரங்கு நிறுவனத்தின் முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்காக 2012.01.12 ஆம் திகதி கொழும்பு இன்டர் கொன்டினல் ஹோட்டலில் நடாத்தப்பட்டது.
- மனித வள ஆலோசனை சேவையின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயலாற்றுகை திட்டத்திற்கமைய Gung Ho குழு செயற்பாடு என்ற பெயரில் விசேட நிகழச்சியொன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆரம்பக்கட்டமாக அணிச் செயற்பாட்டினை மேம்படுத்தல் என்ற தலைப்பின் கீழ் விசேட தொழிற்பாடுகளுடன் கூடிய கருத்தரங்கு 2012 மார்ச் மாதம் 31 மற்றும் ஏப்பிரல் 1 ஆகிய இருநாட்களும் நுவரெலியா அம்பேவெலயில் இடம்பெற்றது.
- தேசத்தின் மாணவச் செல்வங்களுக்காக தொலைபேசி ஊடாக கல்வி உபகாரச் சேவையாக கோல் டீச்சர் என்ற புதிய திட்டத்திற்கான ஆரம்ப கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டது.
- காலி கோட்டை மற்றும் மாத்தறை பொல்ஹேன கரையோரங்களை மையப்படுத்தி வருடாந்த இன்பச் சுற்றுலா 2012 நவம்பர் மாதம் 24 ஆம் திகதி இடம்பெற்றது.
- 2012 ஆம் ஆண்டில் Sony F3 என்ற பெயரில் அழைக்கப்படும் நவீன சினிமா ஒளிப்படக்கருவி மற்றும் Non - Liner Video Editing Systm என அழைக்கப்படும் செம்மைப்படுத்தல் இயந்திரத்தினை கொள்வனவு செய்யப்பட்டது.

## செலசினே ஊழியர் நலன்புரிச் சங்கம்

பல வருட காலமாக செயற்படாதிருந்த செலசினே ஊழியர் நலன்புரிச் சங்கம் நிகழ்கால தலைவரின் வருகையுடன் புத்துயிர் பெற்றது.இன்று அதனை மிகவும் உயர் தொழிற்பாடுகளுடன் கூடிய நலன்புரிச்சங்கமாக அறிமுகப்படுத்த முடியும்

## கடந்த இருவருடங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

- 2010 போசோன் விழாவினை முன்னிட்டு பியகம மல்வானையில் அமைந்துள்ள பெண் சிறுவர் காப்பகத்திற்கு பிரபல தொலைக்காட்சி நட்சத்திரங்களின் பங்குபற்றுதலுடன் தான நிகழ்வு நடாத்தப்பட்டது.
- சங்கத்தின் வளர்ச்சிக்காக சீட்டிலுப்பு ஒன்று நடாத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட்டது.அதன் மூலம் ரூ.50,000 க்கும் அண்மித்த தொகையை சங்கம் ஆதாயமாக பெற்றுக்கொண்டது.
- ஊழியர்களுக்கிடையிலான நட்புறவை வளர்க்கும் நோக்கில் 2010.10.01 மற்றும் 2011.04.01 ஆகிய நாட்களில் வருடாந்த ஒன்றுகூடல் இடம்பெற்றது.
- சங்கத்தின் ஏற்பாட்டில் 2011.06.04 ஆம் திகதி வெலிகடை சிறைச்சாலை மைதானத்தில் உள்ளக கிரிக்கட் போட்டி இடம்பெற்றது.
- 2011 போசோன் விழாவினை முன்னிட்டு 2011.06.15 ஆம் திகதி பன்னிபிடிய"மஹகெதர"முதியோர் இல்லத்தில் புகழ் பெற்ற வானொலி மற்றும் தொலைக்காட்சி நட்சத்திரங்களின் பங்குபற்றுதலுடன் தான நிகழ்வு நடாத்தப்பட்டு சலவை இயந்திரம் உட்பட பல பொருட்கள் வழங்கப்பட்டது.
- சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு ரூ.10,000 அதிகூடிய தொகை மற்றும் குறைந்த வட்டியில் கடன் வசதிகளை பெற்றுக்கொடுக்கும் யோசனைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.
- தாய்/தந்தை உட்பட ஊழியர்களின் குடும்பத்தின் மரணம் ஒன்று ஏற்படின் ரூ.10,000 கொடுப்பனவு வழங்கும் திட்டம்
- வருடாந்தம் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பாடப்புத்தங்களை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம்
- ஊழியரொருவர் பணியிலிருந்து மற்றும் சங்கத்திலிருந்து விலகும் சந்தர்ப்பத்தில் ரூ.5000 கொடுப்பனவை பெற்றுக்கொடுக்கும் திட்டம்

## நிர்மாண மற்றும் வரைகலைப்பிரிவு

கடந்த வருடத்தில் விசேட தொழிற்பாடுகளை மேற்கொண்ட பிரிவாக விருது பெற்ற நிர்மாண மற்றும் வரைகலைப்பிரிவு 2012ஆம் வருடத்திலும் மிகவும் சிறந்த முறையில் செயலாற்றியது.

2012 ஆம் வருடத்தில் நடுப்பகுதியிலிருந்து புதிய முகாமையாளரது செயற்பாட்டின் கீழ் இப்பிரிவு மேலும் விரிவாக்கப்பட்டது. அனுபவமுள்ள பணியாளர்களைக் கொண்ட வரைகலைப்பிரிவு பத்திரிகை விளம்பரத்தயாரிப்பு, முப்பரிமாண பணிகள், சுவரொட்டி, பெனர் உட்பட பல்வேறு விதமான பிரசுர தயாரிப்பு போன்ற பல்வேறு படைப்பக்களை தயாரிக்கும் நிறுவனத்தின் கேந்திர நிலையமாக திகழ்கின்றது.

வரைகலைப்பிரிவு ஊழியர்களின் கனணி அறிவினை மேம்படுத்தும் முகமாக முப்பரிமாண பாடநெறி நடாத்தப்பட்டது. செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் வருமானத்தினை இரட்டிப்பாக்கும் செயற்பாடுகளிற்கு பங்களிப்பு வழங்கும் நோக்குடன் நிர்மாண மற்றும் வரைகலைப்பிரிவின் பொறுப்பு சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு தினந்தோறும் பெற்றுக்கொடுக்கப்படும் விளம்பரங்களில் அதிகமான பத்திரிகை விளம்பரங்களை பெற்றுக்கொடுக்கும் நிறுவனமான செலசினே நிறுவனத்தின் விளம்பரத்தயாரிப்பு விடயங்களுக்கு பொறுப்பான பிரிவாக இப்பிரிவு விளங்கியது.



## விற்பனை மற்றும் வாடிக்கையாளர் சேவை பிரிவு




கடந்த வருடத்தில் விற்பனை விரிவாக்கல் செயற்பாடுகள் சிலவற்றினை மேற்கொண்டதன் விளைவாக பல்வேறு பலன்களை பெற்றுக்கொண்ட விற்பனை மற்றும் வாடிக்கையாளர் சேவைப் பிரிவு, 2012ஆம் வருடத்தில் தமது 450 மில்லியன் ரூபா வருடாந்த இலக்கினை அடையும் நோக்கினைக் கொண்டு தனது பயணத்தினை ஆரம்பித்தது. அனுபவமிக்க விற்பனை அதிகாரிகளின் மற்றும் புதிய அதி-காரிகளைக் கொண்ட அணியாக அறிமுகப்படுத்தக்கூடிய விற்பனைப்பிரிவின் தொழிற்பாடுகள், மிக உயர்மட்டத்தில் இருந்ததைக் காண முடிந்தது.பொது முகாமையாளர் உட்பட உயர் அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் செயற்பட்ட விற்பனைப்பிரிவு 2012 ஆம் ஆண்டில் தனது இலக்கினை விட சற்று குறைவாக 437 மில்லியன் ரூபாய்களுக்கு மேற்பட்ட வருமானத்தினை பெற்றுக்கொண்டது.2011 ஆம் வருடத்துடன் ஒப்பிடும் போது 57 மில்லியன் ரூபா அதிகரிப்பினை இது காட்டுகின்றது. அது கடந்த வருடத்திலும் பார்க்க 15 % அதிகரிப்பாகும்.

அதிகப்படியான இலக்கினை நோக்கிச் பயணித்த விற்பனைப்பிரிவு பெற்றுக்கொண்ட வளர்ச்சி பாராட்டுக்குறியது. சில உத்தியோகத்தர்களுக்கு இணையத்தள மற்றும் மின்னஞ்சல் தொடர்பான ஒரு நாள் பயிற்சிக் கருத்தரங்கு நடாத்தப்பட்டதுடன் “சரியான விற்பனைக் கட்டமைப்பின் மூலம் சரியான வாடிக்கையாளர் சேவை” என்ற தொனிப் பொருளினைக் கொண்ட பயிற்சி கருத்தரங்கும் விற்பனைப்பிரிவின் அனைத்து அதிகாரிகளுக்கும் நடாத்தப்பட்டது.

## ஊடகப்பிரிவு

ஊடகப்பிரிவின் பிரதான கடமையானது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் விளம்பரங்கள் மற்றும் கட்புல செவிபுல தயாரிப்புக்களை ஒழுங்குபடுத்தலை குறிப்பிட முடியும். 2012 ஆம் ஆண்டில் மிகவும் சிறந்த முறை யில் மேற்குறிப்பிட விடயங்கள் மேற்கொள்ளப்பட்டது. விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டது அல்லது ஒளிபரப்பானது தொடர்பாக தொலைக்காட்சி மற்றும் வானொலிகளிடமிருந்து பின்னூட்டல்களை பெற்றுக்கொள்ளுதலும் இப்பிரிவின் தி-னசரி நடவடிக்கையாகும்.

2012 ஆம் வருடத்தினுள் லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்ற விளம்பரங்களில் அதிகமான விளம்பரங்களை ஒழுங்குபடுத்தியிருந்தது செலசினே ஊடகப்பிரிவினால் ஆகும்.

செலசினே நிறுவனம் இலங்கையின் முதற்தர விளம்பர பிரச்சார நிறுவனமாக விளங்குவது இதன் மூலம் தெளிவாகின்றது. ஊடகத்தயாரிப்புக்கள் மட்டுமல்லாது விளம்பரத்தயாரிப்பு தொடர்பான உயர் மட்டத்திலான திறன்களை செலசினே நிறுவனம் கொண்டுள்ளது என்பது இதன் மூலம் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

சனத்தொகை புள்ளிவிபரத்திணைக்களத்தின் அனுசர-னையில் சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் மின்சார சபையின் அனுசரனையில் “ஹெட வெனுவேன் அத” போன்ற பிரச்சார விளம்பரங்கள் மற்றும் “எழுத்துக்கள் கோபிப்பதில்லை” என்ற தமிழ் சிங்கள தொலைக்காட்சி நாடகங்கள் மக்களிடையில் மிகவும் பிரபலமானது.



## தயாரிப்புப்பிரிவு




ஊடகத்தயாரிப்பு பணிகள் சார்ந்த திட்டங்களை தயாரித்து செயற்படுத்தும் பொறுப்பினை மேற்கொள்வது தயாரிப்புப்பிரிவாகும். தொலைக்காட்சி ஆவண நிகழ்ச்சிகள் உட்பட வானொலி மற்றும் தொலைக்காட்சி விளம்பரத்தயாரிப்பு ஆகிய கட்புல செவிபுல ஊடகங்களுக்கான பல்வேறு தயாரிப்பு பணிகளில் ஈடுபட்டு 2012 ஆம் ஆண்டில் விசேட வளர்ச்சியை தயாரிப்புப்பிரிவு பெற்றுக்கொண்டது.

திரைக்கதைக்கான தகவல்களை சேகரித்தல்,திரைக்கதை,படப்பிடிப்புத்தளங்களை தெரிவு செய்தல் மற்றும் தயாரிப்புக்கலைஞர்களை தெரிவு செய்தல் போன்ற முன்தயாரிப்பு பணிகள் உட்பட ஒலிக்கட்டுபாடு, செம்மைப்படுத்தல் போன்ற பணிகளையும் மிகவும் உயர் மட்டத்தில் மேற்கொண்டமை 2012 ஆம் வருடத்தில் மேற்கொண்ட தயாரிப்புக்களிலிருந்து புலனாகியது. ”சுவ ஒசுவகி எவிதிமு சகி,தேயட சவிய மவ் பதவிய, சீகிரிய ஜல கலமனாகரனய, வெவக மஹிம பல ஜலகத கீரிலா, சமனல வேவ யபஸ், போ நோவன ரோக போவேன்னே எய்,பிசோ கொடுவ, சதிபொலக அசிரிய, ஜேதவன தாகெபே அதி-கிரீம் தாக்ஷனய போன்ற ஆவண நிகழ்ச்சிகள் 2012 ஆம் ஆண்டில் மிகவும் பிரபலமான நிகழ்ச்சிகளாக மக்கள் மனம் வென்றுள்ளது.

தொலைக்காட்சி படப்பிடிப்பு பாடநெறி மற்றும் கனணி மென் பொருள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் இப்பிரிவின் சில ஊழியர்கள் பங்குபற்றினர்.

உலகில் தற்போது வரை உற்பத்தி செய்யப்பட்டுள்ள அதிநவீன தொழில்நுட்பத்துடனான Sony PMW-F-3L ஒளிப்படக்கருவி அதிகூடிய செலவில் கொள்வனவு செய்யப்பட்டதும் அக்கருவி தொடர்பான விசேட கருத்தரங்கு 2012 ஏப்பிரல் மாதத்தில் இடம்பெற்றது.அத்துடன் Non - Liner Video Editing System என குறிப்பிடப்படும் செம்மைப்படுத்தல் உபகரணமும் இவ்வருடத்தில் கொள்வனவு செய்வதற்கு உற்பத்திப்பிரிவுக்கு முடிந்துள்ளது.

## மனித வள மற்றும் நிர்வாகப்பிரிவு

மனித வள மற்றும் நிர்வாகப்பிரிவினால் 2012 ஆம் ஆண்டில் விசேட செயற்றிட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டன.மனித வள ஆலோசனை சேவையின் கீழ் சில நிகழ்ச்சித்திட்டங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கது.

2012.01.12 ஆம் திகதி நிறுவன முகாமையாளர்கள் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்காக கொழும்பு இன்னடர்கொன்டினல் ஹோட்டலில் நடாத்தப்பட்ட என்ற பெயரில் விசேட கருத்தரங்கு இடம்பெற்றது.


அத்துடன் அவ் ஆலோசனையின் கீழ் அனைத்து ஊழியர்களுக்காகவும் செயற்படுத்தப்பட்ட செயலாற்றுகை திட்டத்திற்கமைய Gung Ho கூட்டுச் செயற்பாடு என்ற பெயரில் விசேட திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதற்கட்டமாக குழுச் செயற்பாட்டு அபிவிருத்தி உன்ற தொனிப்பொருளில் விசேட தொழிற்பாடுகளுடனான கருத்தரங்கு 2012 மார்ச் 31 மற்றும் ஏப்பிரல் 01 ஆகிய இரு தினங்களில் நுவரெலியா அம்பேவெலயில் இடம்பெற்றது

ஊழியர்களின் திறன்களை வளர்க்கும் முகமாக மற்றும் அவர்களது எதிர்கால நலனுக்காக பல்வேறு பாடநெறிகளை தொடர்வதற்கான முதற்கட்ட பணிகளை ஏற்பாடு செய்வதும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.அனைத்து ஊழியர்களுக்காகவும் Microsoft office பாடநெறியினை கற்பதற்கான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது.
இதற்கு மேலதிகமாக கனணி வரைகலை டிப்ளோமா பாட-நெறியினை கற்பதற்கான சந்தர்ப்பம் வரைகலை பிரிவின் அதிகாரிகளுக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது. மிலோத்ரா நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் தொடர்பான ஒரு நாள் கருத்தரங்கிற்காக குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.
அத்துடன் அவ்வருடத்தினுள் மின்சார தொழில்நுட்ப திறன் பாடநெறியினை கற்பதற்கான வாய்ப்பு ஊழியர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது. மேலும் இலங்கை நிதி அறிக்கையிடல் தர தொழிற்பாட்டினை தெளிவுபடுத்தும் கருத்தரங்கிற்காக கணக்கியல் பிரிவின் ஊழியர்கள் பங்குபற்றியிருந்தனர்.
இதற்கு மேலதிகமாக வழங்கல் செயற்பாடுகள் யாவும் முறையாகவும் திறன் மிக்க முறையிலும் மேற்கொள்ளப்பட்டதுடன் போக்குவரத்து சேவைகளை திட்டமிடல், வாகனப் பராமரிப்பு மற்றும் எரிபொருள் வழங்கலை கட்டுப்படுத்தல் போன்ற பணிகளும் இப்பிரிவினால் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டது.
2012 நவம்பர் மாதம் 24 ஆம் திகதி காலி கோட்டை மற்றும் மாத்தறை போல்ஹேன கடற்கரையினை மையப்படுத்தி வருடாந்த இன்பச்சுற்றுலாவுக்காக மனிதவள மற்றும் நிர்வாகப் பிரிவின் அனுசரனை பெற்றுக்கொடுக்கப்பட்டது.



SELACINE TELEVISION INSTITUTE

## நிதிப்பிரிவு




கடந்த வருடத்தில் புதிய விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இடம்பெற்ற சிறந்த நிதி தொழிற்பாடுகள் 2012 ஆம் வருடத்திலும் மிகச்சிறந்த முறையில் தொடர்ந்தது. அரசின் கணக்கியல் நியமங்களுக்கமைய அனைத்து நிதி விடயங்களும் முறையாக செயற்படுத்தப்பட்டது.கடன்களை அறவிடுவதற்காக விசேட திட்டமொன்று செயற்படுத்தப்பட்டு அதன் மூலம் மிகச் சிறந்த பலன்கள் இப்பிரிவினால் பெற்றுக்கொள்ளப்பட்டது

உள்ளக கணக்காய்வுப் பிரிவினை அமைத்ததன் மூலம் இவ்வருடத்தில் கணக்கியல் பணிகள் மிகவும் தெளிவுபடுத்தப்பட்டது. மற்றைய பிரிவுகளுடன் மேற்கொள்ளப்படும் கோப்புக்கள் மிகவும் சிறந்த முறையில் 2012 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டது.


இலங்கை நிதி அறிக்கையிடல் தர தொழிற்பாட்டினை தெளிவுபடுத்தும் கருத்தரங்கிற்காக கணக்கியல் பிரிவின் ஊழியர்கள் பங்குபற்றியிருந்ததன் மூலம் இப்பிரிவின் ஊழியர்கள் அவ்விடயம் தொடர்பான அறிவினை பெற்றுக்கொள்ள முடிந்தது.

2011 ஆம் வருடமும் 2012 ஆம் வருடத்திலும் நிதியறிக்கை சரியான முறையில் தயாரிக்கப்பட்டது. அதன்படி அடுத்தடுத்து இரண்டாவது தடவையாகவும் கணக்காய்வாளர் அறிக்கையினூடாக நிதிநிலைமை மற்றும் 2012.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதி நடவடிக்கைகள் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கியல் தரங்களுக்கமைய உண்மையானதும் சாதாரணமான வெளிப்படுத்தல்களை காட்டுவதாக கணக்காய்வாளரின் கருத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.


இதன் மூலம் நிதிப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கியல் நடவடிக்கைகளின் உண்மைத்தன்மை மற்றும் திறன் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

# நிதியறிக்கை 2011


## வருமான வளர்ச்சி





## கடந்த 05 வருடங்களினுள் வருமானம் மற்றும் செலவு



## 2007-2012 ஆம் வருடங்களுக்கிடையில் நிறுவனத்தின் இலாபப் போக்கு




## 2007 மற்றும் 2008 ஆம் வருடங்களில் தனிநபர் உழைத்த வருமானம் மற்றும் நிறுவனம் தனிநபருக்காக மேற்கொண்ட நிர்வாகச் செலவினை ஒப்பிடல்




தனிநபரினால் உழைக்கப்பட்ட சாதாரண வருமானம் = மொத்த வருமானம் / பணியாளர்களின் எண்ணிக்கை

தனிநபருக்காக செலவிடப்பட்ட சாதாரண செலவு = நிர்வாகச் செலவு / பணியாளர்களின் எண்ணிக்கை

**2012 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான கணக்குக்கொள்கை**

**1 பொதுத் தகவல்கள்**

**1.1 நிறுவனத் தகவல்கள்**

செலசினே தொலைக்காட்சி நிறுவனம் (இதன் பின்னர் செலசினே என்று அழைக்கப்படும்) 2005-12-08 ஆம் திகதியுடைய இல /1422/22 அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சின் விடயதானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டது

**1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கை நிலவரம்**

விளம்பரப்படுத்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு, நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பது நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளாகும்

**1.3 ஊழியர்களின் எண்ணிக்கை**

2012-12-31 ஆம் திகதியில் 15 நிரந்தர ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட 33 ஊழியர்களும் பணியாற்றினர்.

**2. கணக்கு கொள்கை தொடர்பில் விசேடமான சாரம்சம்**

**2.1 பொதுவான கொள்கை**

இவ் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்குக் கொள்கைகள் மற்றும் இலங்கை கணக்காய்வாளர் நிறுவனத்தின் வழிகாட்டலின் கீழ் முன்னேடுக்கப்படும் இலங்கை கணக்கியல் கொள்கைகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டதாகும்.

**2.2 நிலைத்தன்மை மற்றும் ஒப்பீடு**

இவ்வருடத்திற்காக பயன்படுத்தப்பட்ட கணக்குக் கொள்கை கடந்த வருடத்தில் பயன்படுத்தப்பட்ட கணக்குக் கொள்கையுடன் சமமாகின்றது.

**2'3 கடன் செலவு**

இங்கு கடன் செலவாக அறியப்பட்டது குறிப்பிட்ட கணக்கியல் காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட செலவாகும்

**3. சொத்து மதிப்பிடுதல் மற்றும் அவை மதிப்பிடும் அடிப்படை**

**3.1 சொத்துக்கள், செலவு மற்றும் உபகரணங்கள்**

செலவு அல்லது அளவு மறுமதிப்பீட்டின் அடிப்படையில் சொத்து,செலவு மற்றும் உபகரணங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

**3.2 வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை**

வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை மதிப்பிடப்பட்ட தீர்வை பெறுமதி அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது

**3.3 காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவையானது கையிருப்பிலுள்ள பணம் மற்றும் வங்கிகளில் உள்ள கோரிக்கை வைப்புக்களை உள்ளடக்கும்

**3.4 குத்தகை சொத்துக்கள்**

குத்தகை தொடர்பான நியமங்களில் உரிமையை காட்டும் அனைத்து இடர் மற்றும் வெகுமதிகளும் நிதிக் குத்தகை என வகைப்படுத்துவதற்கு செலசினே நிறுவனம் முனைகின்றது.குத்தகை தொடர்பான முதன்மை அறிமுகப்படுத்தலில் அதில் குறைந்தபட்ச குத்தகை கொடுப்பனவுகளை செலுத்தும் போது அதன் சாதாரண பெறுமதி மற்றும் நிகழ்கால பெறுமதிக்கு மிகவும் குறைந்தபட்ச கணக்கிடல் இடம்பெறுகின்றது.முதன்மை அறிமுகப்படுத்தலின் பின்னர் சொத்துகக்ளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகளுக்கு அமைவாக சொத்துக்கள் மதிப்பிடப்படும்.

**3.5 தேய்மானம்**

வருமான அறிக்கையில் தேய்மானம் என குறிப்பிடப்பட்டுள்ளது பயன்படுத்தக்கூடிது என மதிப்பீடு செய்யப்பட்ட செத்துக்களை அடிப்படையாகக் கொண்ட இலகுவான வழிகளை உபயோகப்படுத்தியாகும்.நிதிக்குத்தகையின் கீழுள்ள குறுகிய கால மற்றும் பயன்படுத்தக்கூடிய சமமான பெறுமதியுடைய செத்துக்களில் தேய்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சொத்து மற்றும் உபகரணங்களின் தேய்மானம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தளபாடங்களை பொருத்துதல் | 2-5 வருடங்கள் |
| கனணி உதிரிப்பாகங்கள் | 3-5 வருடங்கள் |
| காரியாலய உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடங்கள் |
| ஒளிப்பட உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| குணக்கியல் மென்பொருட்கள் | 05 வருடங்கள் |

நிறுவனத்தின் கோட்பாட்டிற்கமைய நிகழ்கால வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் அவ்வருடத்தில் தேய்மானங்களுக்காக ஒதுக்கப்படவில்லை

**4** பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

**4.1** ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் கோரிக்கை அடிப்படையில் செலுத்த வேண்டிய நடைமுறை பொறுப்புக்கள் ஐந்தொகையில் பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஐந்தொகை தினத்திலிருந்து ஒருவருட காலத்திற்கு பின்னர் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் நீண்ட கால பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**4.2** ஓய்வூதியக் கொடுப்பனவு

1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கமுடைய ஓய்வூதிய கொடுப்பனவு சட்டத்திற்கு அமைவாக தொடர்ச்சியாக 05 வருட சேவையினை பூர்த்தி செய்து சேவையினை விட்டு விலகும் ஊழியர்களுக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**4.3** வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

சேவையை நிறைவு செய்த ஊழியர்களுக்கான நன்மைத் திட்டமாக ஒரு நிறுவனத்தினால் இன்னோரு நிறுவனத்திற்கு செலுத்தப்படும் நிரந்தர பங்களிப்பினை விடுத்து தொடர்ந்து வேறு கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு தொடர்ச்சியான அல்லது வரையறுக்கப்பட்ட தொடர்பினை கொண்டிராத ஊழியர்களுக்கான நன்மைத் திட்டமே வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்ட யோசனையாகும். அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கியவாறு சேமலாப மற்றும் நம்பிக்கை நிதியத்திற்காக கொடுப்பனவுகளை செலுத்தவேண்டிய கட்டாயத்தின் பேரில் செலுத்தப்படும் இலாபம்/நட்ட கணக்குகளை செலவாக அவற்றை செலுத்தும் சந்தர்ப்பத்திலேயே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக குறிப்பிட்ட சட்டதிட்டங்களுக்கு அமைவாக தொழில் வழங்குனரின் பங்களிப்பினை பெறுவதற்கு ஊழியர்கள் தகுதி பெறுவர்.

ஊழியரின் மொத்த வருமானத்தில் 15% மற்றும் 3% என்ற அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலசினே பங்களிப்பு வழங்குகின்றது.

**5.** வருமான அறிக்கை

**5.1** மொத்த வருவாய்

செலசினே நிறுவனத்தின் மொத்த வருவாய் வரைகலை, திட்டமிடல், நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சி தயாரிப்பு என்பனவற்றின் மூலம் கிடைக்கின்றது.

**5.2** வருமானத்தினை இனங்காணல்

பொருளாதாரத்தின் நன்மைகள் நிறுவனத்திற்கு கிடைக்குமாறு மற்றும் அதன் ஊடான நிரந்தரமான வருமானத்தினை மதிப்பிடக் கூடியவாறான வருமான உழைப்பு வருமானமாக இனங்காணப்படும்.

**5.3** செலவை இனங்காணுதல்

வருமான அறிக்கையில் செலவுகள் வருமாறு இனங்காணப்பட்டுள்ளது. பெற்றுக்கொள்ளப்பட்ட செலவு மற்றும் விசேடமான வருமான பிரிவின் உழைப்புக்கிடையில் நேரடி தொடர்புடயதான அடிப்படையில்.

**6.** உரித்துடைய பிரிவினருடனான கொடுக்கல் வாங்கல்

நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் எந்தவொரு பிரிவினருடனும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் செய்யப்படவில்லை

**7.** ஐந்தொகைக்கு பின்னரான ஒப்பிடும் குறிப்புக்கள்

கணக்கு அறிக்கையில் வெளிப்படுத்த வேண்டிய அல்லது ஒப்பீடுகளை செய்ய வேண்டிய அளவிலான நிகழ்வுகள் ஐந்தொகை தினத்திற்கு பின்னர் இடம்பெறவில்லை

**8.** இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தலின் படி பிரமுக வங்கியில் இருப்பிலிருந்த ரூ.300,000 வைப்பு, இலங்கை சேமிப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

**9.** 2011 ஆம் வருடத்தில் கடன்பட்டோர் ஆவணத்தில் நீக்கப்பட்டவை, முழு இலாபத்தில் ஒப்பிடப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளது.

**10.** கடன்பட்டோருக்காக 5 அறவிடமுடியாக் கடன்கள் வேறுபடுத்தப்பட்டுள்ளது.

# வருமான அறிக்கை

| 2012 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கானது | பதிவு | இலங்கை ரூபாவின் படி | | |
|---|---|---|---|---|
| | | 2012 | 2011 | 2010 |
| | | ரூ | ரூ | ரூ |
| வருமானம் | 11 | 437,939,421 | 380,317,637 | 143,590,886 |
| கழிக்கப்பட்டது: | | | | |
| நேரடிச் செலவு | 12 | 372,938,887 | 341,854,183 | 123,864,022 |
| நிகர இலாபம் | | 65,000,534 | 38,463,454 | 19,726,864 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 13 | 810,873 | 313,930 | 84,788 |
| | | 65,811,407 | 38,777,384 | 19,811,652 |
| கழிக்கப்பட்டது: | | | | |
| விநியோகச் செலவு | 14 | 7,392,272 | 3,440,965 | 996,248 |
| நிர்வாகச் செலவு | 15 | 26,169,495 | 22,718,447 | 17,518,274 |
| ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் | 16 | 1,449,410 | 89,373 | 149,890 |
| ஐயக்கடன் | | 6,219,283 | 2,282,976 | |
| வேறு தொழிற்பாடுகளினால் பெறப்பட்ட இலாபம் | - | 24,580,948 | 10,245,624 | 1,147,240 |
| கழிக்கப்பட்டது | | | | |
| தேய்மானம் | | 1,934,578 | 2,244,276 | - |
| | | 22,646,370 | 8,001,348 | 1,147,240 |
| கழிக்கப்பட்டது | | | | |
| நிதிச் செலவு | 17 | 1,208,428 | 462,113 | 133,477 |
| வருடத்திற்கான நிகர இலாபம் / (நட்டம்) | | 21,437,942 | 7,539,235 | 1,013,763 |

# ஐந்தொகை

டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு | இலங்கை ரூபாவின் படி

| | | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|
| சொத்துக்கள் | பதிவு | ரூ | ரூ | ரூ |
| நடைமுறையில்லா சொத்துக்கள் | | | | |
| சொத்துக்கள், வேலைத்தளம் மற்றும் உபகரணங்கள் | 18 | 20,144,197 | 7,093,233 | 10,468,442 |
| நிறுவனத் திட்டம் | | - | - | 50,000 |
| நிலையான வைப்புக்கள் | 19 | 20,800,000 | 800,000 | 800,000 |
| நடைமுறை சொத்துக்கள் | | | | |
| வியாபாரம் மற்றும் கிடைக்க வேண்டிய வருமதிகள் | 20 | 131,503,883 | 136,875,538 | 81,081,597 |
| வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 21 | 100,000 | 3,121,440 | 3,323,863 |
| காசு மற்றும் காசுக்கு நிகரானவை | 22 | 45,554,440 | 34,121,116 | 10,382,101 |
| மொத்த சொத்துக்கள் | | 218,102,520 | 182,011,328 | 106,106,004 |
| பங்குகள் மற்றும் பொறுப்புக்கள் | | | | |
| மூலதனம் மற்றும் கையிருப்பு | | | | |
| திரட்டிய இலாபம் /(நட்டம்) | 23 | 26,194,953 | 9,100,002 | 12,540,425 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | | | | |
| அரச நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிதி | 24 | - | 1,344,176 | 1,344,176 |
| அரச நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிதி | 25 | 4,053,061 | 3,516,376 | 2,030,428 |
| குத்தகைக் கடன்கள் | 26 | 1,375,041 | 1,986,497 | 739,618 |
| திறைசேரிக் கடன் | | 9,300,000 | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | | |
| வியாபாரம் மற்றும் செலுத்த வேண்டிய வேறு செலவுகள் | 27 | 177,053,214 | 164,307,848 | 89,451,357 |
| கிடைத்த முற்கொடுப்பனவு | | 126,252 | 1,756,429 | - |
| முழு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | | 218,102,520 | 182,011,328 | 106,106,004 |

உண்மையானது என பணிப்பாளர்களினால் உறுதிப்படுத்தப்படுகின்றது.
கையெழுத்திட்டது

பிரதீப் எதிரிசிங்ஹ
தலைவர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்

සැලසිනෙ
செலசினை
SELACINE
TELEVISION INSTITUTE

# காசுப்பாய்ச்சல் கூற்று

| டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | 2012 | 2011 |
| --- | --- | --- |
| இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது | ரூ | ரூ |
| செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் பெறப்பட்ட காசுப்பாய்ச்சல் | | |
| வரிக்கு முந்திய நிகர இலாபம் | 21,437,942.00 | 7,539,235.00 |
| ஒப்பீடுகள் | | |
| வட்டி செலவு | 343,497.00 | 208,324.00 |
| வட்டி வருமானம் | (717,885.00) | (89,175.00) |
| கட்டிட வாடகை மற்றும் பொருட்களின் தேய்மானம் ஒதுக்கல் | 1,934,578.00 | 2,244,276.00 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 745,953.00 | 420,047.00 |
| ஐயக்கடன் ஏற்பாடுகள் | 2,937,883.00 | 2,282,976.00 |
| நிதியத்திற்கான கடந்த வருட ஒப்பீடுகள் | (4,342,992.00) | (2,762,224.00) |
| நிறுவனத்தின் முதன்மை செலவுகள் | | (50,000.00) |
| சொத்து செலவுகள் மற்றும் உபகரணங்களை அகற்றிய பின்னரான நட்டம் | 2,800.00 | |
| மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | **22,341,776.00** | **9,793,459.00** |
| வியாபாரம் மற்றும் ஏனைய வருமதிகள் (அதிகரித்தல்/குறைவடைதல்) | 2,422,772.00 | (59,075,341.00) |
| முற்பணம் மற்றும் வைப்புக்கள் (அதிகரித்தல்/குறைவடைதல்) | 3,021,440.00 | 202,423.00 |
| அரச நிறுவனங்களுக்கான கொடுப்பனவுகள் (அதிகரித்தல்/குறைவடைதல்) | (1,344,176.00) | - |
| பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களுக்கான வட்டி(அதிகரித்தல்/குறைவடைதல்) | (611,456.00) | 1,246,879.00 |
| வியாபார மற்றும் மற்றைய கொடுப்பனவுகளின் (அதிகரித்தல்/குறைவடைதல்) | 12,745,366.00 | 74,856,491.00 |
| பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களின் (அதிகரித்தல/குறைவடைதல்) | (1,630,177.00) | 1,756,429.00 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் பெறப்பட்ட பணம் | **36,956,545.00** | **28,780,340.00** |
| செலுத்தப்பட்ட வட்டி | (343,497.00) | 208,324.00 |
| வருமான வரி | | |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் | (209,268.00) | (194,117.00) |

| டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | 2012 | 2011 |
| --- | --- | --- |
| இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது | ரூ | ரூ |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் பெறப்பட்ட பணம் | **36,403,780.00** | **28,377,890.00** |
| முதலீட்டு நடவடிக்கைகளின் நிதியறிக்கை | | |
| சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களை அகற்றியதால் பெறப்பட்ட காசு | 2,000.00 | |
| சொத்து, இயந்திர மற்றும் உபகரண கொள்வனவு | (14,990,341.00) | (4,728,059.00) |
| நிலையான வைப்பு முதலீடு | (20,000,000.00) | - |
| வட்டி வருமானம் | 717,885.00 | 89,175.00 |
| தொழிற்பாட்டு நடடிவக்கைகளில் நிகர காசுப்பாய்ச்சல் | **(34,270,456.00)** | **(4,638,884.00)** |
| நிதி நடடிவக்கைகளில் நிகர காசுப்பாய்ச்சல் | | |
| திறைசேரி கடன் பெற்றுக்கொள்ளல் | 9,300,000.00 | |
| கடன்களை மீளச்செலுத்துதல் | | |
| நிதி நடவடிக்கைகளில் நிகர காசுப்பாய்ச்சல் | **9,300,000.00** | |
| காசு மற்றும் திரவத்தன்மையின் நிகர அதிகரிப்பு | **11,433,324.00** | **23,739,015.00** |
| வருட ஆரம்பத்தின் காசு மற்றும் திரவத்தன்மை | **34,121,116.00** | **10,382,101.00** |
| வருட இறுதியில் காசு மற்றும் திரவத்தன்மை | **45,554,440.00** | **34,121,116.00** |

# நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

| டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| (இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது) | ரூ. | ரூ. | ரூ. |
| 11 சேவை வழங்குதல் மூலம் கிடைத்த இலாபம் | | | |
| தயாரிப்பு | 27,611,388 | 24,403,033 | 6,541,162 |
| வரைகலை | 38,617,520 | 11,464,431 | 8,382,823 |
| திட்டமிடல்கள் | 328,408,933 | 242,425,047 | 89,096,089 |
| ஏனையவை | 43,301,580 | 102,025,127 | 39,570,812 |
| | 437,939,421 | 380,317,637 | 143,590,886 |
| நேரடி செலவு | | | |
| தயாரிப்பு செலவு | 14,015,088 | 16,979,018 | 4,158,345 |
| வரைகலைக்கான செலவு | 31,884,512 | 9,870,442 | 6,826,290 |
| திட்டமிடல் செலவு | 286,912,288 | 230,949,632 | 78,835,180 |
| ஏனைய செலவு | 40,126,999 | 84,055,091 | 34,044,208 |
| | 372,938,887 | 341,854,183 | 123,864,022 |
| ஏனைய செயற்பாட்டு இலாபம். | | | |
| ஊழியர் கடன் வட்டி | 34,612 | 9,495 | 6,106 |
| வங்கி வட்டி | 683,273 | 79,680 | 32,742 |
| வேறு வட்டி | 24,988 | 126,405 | 26,000 |
| வழங்குனர்கள் பதிவு | 28,000 | 98,350 | 19,940 |
| Call Center திட்டம் | 40,000 | - | - |
| | 810,873 | 313,350 | 84,788 |
| விநியோகச் செலவு | | | |
| எரிபொருள் | 1,229,499 | 1,018,188 | 395,499 |
| மோட்டார் வாகன திருத்தல் மற்றும் பராமரிப்பு | 560,742 | 949,890 | 313,746 |
| போக்குவரத்து, பயணச்செலவு மற்றும் தரிப்பிட கட்டணம் | 82,184 | 44,118 | 59,396 |
| பிரசாரச் செலவு | - | - | 27,265 |
| விற்பனை விரிவாக்கல் செலவு | 4,610,740 | 740,604 | 198,505 |
| விற்பனை ஊக்குவிப்பு கொடுப்பனவு | 894,170 | 688,164 | 1,838 |
| காப்புறுதி நட்டம் | 14,938 | | |
| | 7,392,272 | 3,440,965 | 996,248 |

| 2012 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| (இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது) | ரூ | ரூ | ரூ |
| நிர்வாக செலவு | | | |
| சம்பளம் மற்றும் வேதனம் | 14,499,759 | 13,485,650 | 11,297,430 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 1,422,470 | 1,337,512 | 1,061,925 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 284,264 | 267,503 | 212,385 |
| ஊழியர் மேலதிக நேரம் மற்றும் மேலதிக கொடுப்பனவு | 835,764 | 669,467 | 422,550 |
| தொலைபேசி | 432,285 | 406,394 | 421,805 |
| ஊழியர் நலன்புரி | 1,369,735 | 1,091,662 | 221,377 |
| முத்திரை | 34,101 | 27,956 | 29,066 |
| அச்சு மற்றும் காகிதாதி | 1,413,498 | 1,022,951 | 385,920 |
| கணக்காய்வு கட்டணங்கள் | - | 30,000 | - |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 657,078 | 24,438 | 8,500 |
| வாகன வாடகை | 1,185,000 | 1,155,833 | 852,000 |
| கட்டிட வாடகை | - | - | 900,000 |
| மின்சாரம் | 418,502 | 647,716 | 357,228 |
| ஊக்குவிப்பு கொடுப்பனவு | 669,249 | 695,750 | 380,000 |
| பணிக்கொடை கொடுப்பனவு | 745,953 | 420,047 | 191,673 |
| பணிப்பாளர் ஊதியம் | 600,000 | 520,000 | 361,750 |
| நீர் | 119,926 | 79,788 | 56,376 |
| பதிவுக் கட்டணம் | 73,589 | 21,400 | 13,500 |
| புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு / காரியாலய உப-கரணம் | 481,565 | 259,759 | 291,068 |
| புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு / உற்பத்தி உப-கரணம் | 226,229 | 367,262 | 53,720 |
| பத்திரிகை செலவு | 40,965 | 61,795 | - |
| சமய மற்றும் கலாச்சார நிகழ்வுச் செலவு | 115,780 | 51,515 | - |
| சமூக நலன்புரி | 212,853 | 74,050 | - |
| கட்டிட செலவுகள் | 17,562 | - | - |
| தொழில் கட்டணங்கள் | 195,000 | - | - |
| டென்டர் கட்டணங்கள் | 17,500 | - | - |
| மொழிபெயர்ப்பு கட்டணங்கள் | 98,070 | - | - |
| காரியாலய உபகரணங்கள்-நட்டம் | 2,800 | - | - |
| | 26,169,495 | 22,718,447 | 17,518,274 |
| 16. ஏனைய செலவுகள் | | | |
| பொருளாதார கட்டணம் | - | - | 37,173 |
| ஏனைய செலவுகள் | 515,278 | 12,373 | 17,859 |
| நாளாந்த செலவு | 429,475 | 77,000 | 94,859 |
| Call Center திட்டம் | 504,657 | - | - |
| | 1,449,410 | 89,373 | 149,890 |

| 2012 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| (இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது) | ரூ | ரூ | ரூ |
| 17. நிதிச் செலவு | | | |
| வங்கிக் கட்டணம் | 37,955 | 44,473 | 20,642 |
| அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிக் கட்டணம் | 826,976 | 209,316 | 82,896 |
| குத்தகை வட்டி | 343,497 | 208,324 | 29,939 |
| | 1,208,428 | 462,113 | 133,477 |

2012 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது

18. சொத்து, வேலைத்தளம் மற்றும் உபகரணம்.

| விபரம் | மரத்தளபாடம் மற்றும் பொருத்துதல | கணிணி உதிரிப்பாகங்கள | காரியாலய உபகரணமை | மோட்டார் வாகனம | கேமரா மற்றும் உப-கரணம் | கணக்கியல் மென்பொருள | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01.01.2012 ஆம் திகதியில் செலவு | 1,217,421 | 3,384,940 | 2,027,059 | 6,759,007 | 3,213,648 | 750,000 | 17,352,074 |
| சேர்த்தல் | 331,150 | 536,650 | 455,213 | 1,961,500 | 11,095,827 | 610,000 | 14,990,341 |
| நீக்கல் | - | - | 18,000 | - | - | - | 18,000 |
| 31.12.2012 ஆம் திகதி வரை | 1,548,571 | 3,921,590 | 2,464,272 | 8,720,507 | 14,309,475 | 1,360,000 | 32,324,415 |
| தேய்மானம் 01.01.2012 திகதிக்கு | 793,249 | 2,243,040 | 1,398,935 | 2,598,488 | 3,075,128 | 150,000 | 10,258,840 |
| வருடத்திற்கான செலவு | 124,558 | 311,625 | 199,433 | 1,102,802 | 46,160 | 150,000 | 1,934,578 |
| நீக்கல்கள் | - | - | 13,200 | - | - | - | 13,200 |
| 31.12.2011 ஆம் திகதி வரை | 917,807 | 2,554,665 | 1,585,168 | 3,701,290 | 3,121,288 | 300,000 | 12,180,218 |
| நிகர புத்தக பெறுமதி 31.12.2011 திகதி வரை | 630,764 | 1,366,925 | 879,104 | 5,019,217 | 11,188,187 | 1,060,000 | 20,144,197 |

| 2012 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| (இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது) | ரூ | ரூ | ரூ |
| 19. நிலையான வைப்பு | | | |
| இலங்கை வங்கி - கணக்கிலக்கம் 742656 | 500,000 | 500,000 | 500,000 |
| இலங்கை வங்கி - கணக்கிலக்கம் 73404 | 10,000,000 | - | - |
| இலங்கை வங்கி - கணக்கிலக்கம் 73405 | 10,000,000 | - | - |
| பிரமுக வங்கி- 103009002920 (இலங்கை சேமிப்பு) ரூ | 300,000 | 300,000 | 300,000 |
| | 20,800,000 | 300,000 | 300,000 |
| 20. வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை | | | |
| வியாபாரக் கடன் பெற்றவர்கள் | 118,166,373 | 124,962,586 | 53,354,408 |
| பண்டிகை முற்பணம் | 75,000 | 78,500 | 86,599 |
| ஊழியர் கடன் | 945,130 | 657,160 | 293,270 |
| சம்பள முற்பணம் | - | 14,500 | 17,500 |
| கண்டி பினான்ஸ் | - | - | 992 |
| சேர்க்கப்பட்ட பெறுமதிக்கான வரி (1/3) | - | - | 3,833,318 |
| பிடித்துவைத்தல் வரி | 4,556,283 | 4,556,283 | 4,508,794 |
| பொருளாதார சேவைக்கான கட்டணம் | 3,913,602 | 2,806,023 | 1,115,737 |
| உபாலி பத்திரிகை நிறுவனம் | 10,695 | 10,695 | 10,695 |
| வரையறுக்கப்பட்ட எக்ஸத் பத்திரிகை நிறுவனம் | 3,528,092 | 3,036,081 | 885,734 |
| விஜய பத்திரிகை | 172,245 | 172,245 | 172,245 |
| ஈ.ஏ.பீ | 3,004 | 3,004 | 3,004 |
| இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | - | 207,835 | 207,835 |
| சுயாதீன தொலைக்காட்சி | - | 138,557 | 138,557 |
| லக்ஹன்ட வானொலி சேவை | - | 77,938 | 77,938 |
| சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு வரி | - | - | 15,979,613 |
| தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரி | - | - | 390,158 |
| மீளச் செலுத்தப்படும் வைப்பு | 100,000 | 102,550 | 2,550 |
| ஊழியர் நலன்புரி சங்கம் | - | 5,650 | 2,650 |
| ஊழியர் நலன்புரி சங்கம் | 33,458 | 45,931 | - |
| | 131,503,883 | 136,875,538 | 81,081,597 |
| 20. (a) வியாபாரக் கடன் பெற்றவர்கள் | | | |
| வியாபாரக் கடன் பெற்றவர்கள் 2012 வருடம் வரை | 124,385,656 | 128,243,987 | 53,354,408 |
| கழிக்கப்பட்டது: | | | |
| ஐயக்கடன் ஏற்பாடு | 6,219,283 | 3,281,400 | - |
| | 118,166,373 | 124,962,586 | 53,354,408 |

| 2012 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| (இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது) | ரூ | ரூ | ரூ |
| 21. வைப்பு மற்றும் முற்கொடுப்பனவு | | | |
| வங்கிப் பிணை | 100,000 | 2,621,440 | 1,638,438 |
| முற்கொடுப்பனவு | - | 500,000 | 1,685,425 |
| | 100,000 | 3,121,440 | 3,323,863 |
| 22. காசு மற்றும் அதற்கு சமமானவை | | | |
| இலங்கை வங்கி கணக்கு | 18,892,885 | 26,413,618 | 8,727,444 |
| இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு | 26,661,555 | 7,410,266 | 1,625 |
| மர்ச்சன்ட் வங்கி | - | 5,000 | 5,000 |
| மக்கள் வங்கி | - | 1,500 | 1,500 |
| கையிருப்பிலுள்ள பணம் | - | 15,007 | 500 |
| தயாரிப்பு முற்பணம் | - | 222,425 | 1,646,032 |
| வேறு முற்பணங்கள் | - | 53,300 | - |
| | 45,554,440 | 34,121,116 | 10,382,101 |
| 23. முழு இலாபம்/(நட்டம்) | | | |
| முன் கொணரப்பட்ட மீதி | 9,100,002 | 12,540,425 | 11,288,702 |
| கூட்டப்பட்டது : நீக்கப்பட்ட ஆரம்ப மீதி (ஆவணம் அ) | 1,433,174 | 340,012 | 298,590 |
| | 10,533,176 | 12,880,437 | 11,587,292 |
| கழிக்கப்பட்டது : கடந்த வருட ஒப்பிடல் (ஆவணம் ஆ) | 5,776,166 | (11,319,669) | (60,630) |
| | 4,757,010 | 1,560,767 | 11,526,662 |
| | 21,437,942 | 7,539,235 | 1,013,763 |
| வருடத்திற்கான இலாபம்/(நட்டம்) | 26,194,953 | 9,100,002 | 12,540,425 |

| 2012 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| (இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது) | ரூ | ரூ | ரூ |
| 23. (அ) நீக்கப்பட்ட ஆரம்ப நிலுவை | - | - | 4,400 |
| பணிப்பாளர் சம்பளம் | - | - | 114,000 |
| போனஸ் கொடுப்பனவு | - | - | 7,176 |
| வங்கிக் கடன் | - | - | 13,000 |
| செயற்பாட்டுக்கான கடன் | - | - | 520 |
| பன்ஹித காப்புறுதி | - | - | 1,540 |
| இலங்கை சுதந்திர ஊழியர் சங்கம் | - | - | 2,250 |
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு | - | - | 146,400 |
| பிடித்து வைத்தல் வரி | - | - | 9,304 |
| கையடக்க தொலைபேசிக் கட்டணம் | - | - | - |
| ஊழியர் நலன்புரி நிதியம் | - | 173,895 | - |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | - | 141,117 | - |
| நிறுவன கட்டமைப்பு | - | 25,000 | - |
| ரத்துச் செய்யப்பட்ட காசோலைகள்<br>பணிக்கொடை ஒப்பீடுகள்<br>அரச நிறுவனங்கள் வழங்கிய நிதி | 80,000 | - | - |
| | 8,998 | - | - |
| | 1,344,176 | - | - |
| | 1,433,174 | 340,012 | 298,590 |
| 20. (ஆ) கடந்த வருடத்திற்கான ஒப்பிடல் | | | |
| கணக்காய்வுக் கட்டணம் | - | 132,451 | 30,630 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | - | 187,237 | - |
| மின்சாரம் | - | 141,922 | - |
| பணிக்கொடை கொடுப்பனவு | - | 1,265,127 | - |
| அனர்த்தக் கொடுப்பனவு | 6,000 | 202,408 | - |
| பண்டிகை முற்பணம் | 3,500 | 42,099 | - |
| கடன் பெற்றோர் | 5,742,616 | 178,606 | - |
| கண்டி பினான்ஸ் | - | 992 | - |
| கணக்காய்வாளர் கட்டணம் | - | - | 30,000 |
| கடந்த ஆண்டுக்கான தேய்மானம் | - | 8,014,565 | - |
| கடன் பெற்றோர் | - | 654,261 | - |
| வங்கிப் பிணை | - | 500,000 | - |
| சம்பள முற்பணம் | 14,500 | - | - |
| கிடைக்க வேண்டிய வைப்புக்கள் | 2,550 | - | - |
| மர்ச்சன்ட் வங்கி | 5,000 | - | - |
| பீபள்ஸ் வங்கி | 1,500 | - | - |
| | 500 | - | - |
| கையிருப்பிலுள்ள பணம் | 5,776,166 | 11,319,669 | 60,630 |

| 2012 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|
| இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது | | ரூ | ரூ | ரூ |
| 24. அரச நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நிதி | | | | |
| அரச நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நிதி | | - | 1,344,176 | 1,344,176 |
| | | - | 1,344,176 | 1,344,176 |
| 25. செலுத்தவேண்டிய பணிக்கொடை | | | | |
| முன்கொணரப்பட்ட மீதி | | 3,516,376 | | |
| சேர்க்கப்பட்டது:வருடத்திற்கான பணிக்கொடை செலவு | | 745,953 | | |
| | | 4,262,329 | | |
| கழிக்கப்பட்டது:பணிக்கொடை கொடுப்பனவு | | (209,268) | | |
| செலுத்த வேண்டிய பணிக்கொடை | | 4,053,061 | 3,516,376 | 2,030,428 |
| 26. வட்டி செலுத்த வேண்டிய கடன் | | | | |
| இலங்கை வங்கி குத்தகை கணக்குடமையாளர் | | | | |
| 1 மைக்ரோ வேன் பீபீ. 9583 | | 959,541 | 1,308,465 | 1,744,620 |
| கழிக்கப்பட்டது:வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு | | (348,924) | (348,924) | (87,231) |
| | | 610,617 | 959,541 | 1,657,389 |
| கழிக்கப்பட்டது: நடைமுறை பெறுப்புக்கு மாற்றியவை | | | | |
| இலங்கை வங்கி வரித்தவணை | 256,412 | | | |
| இலங்கை வங்கி வரி வட்டி | 92”512 | (348,924) | (348,924) | (348,924) |
| | | 261,693 | 610,617 | 1,308,465 |
| ஐய வட்டி | 65,190 | | - | |
| வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு | (125,831) | (60,641) | 65,104 | (568,847) |
| | | 322,334 | 545,513 | 739,618 |

| 2012 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|
| இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது | | ரூ | ரூ | ரூ |
| 2 பஜாஜ் முச்சக்கர வண்டி வை.கே. 3144 | | 279,150 | 401,976 | |
| கழிக்கப்பட்டது: வருடத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு | | (133,992) | (122,826) | |
| | | 145,158 | 279,150 | |
| கழிக்கப்பட்டது: நடைமுறை பொறுப்புக்கு மாற்றம் செய்தது | | | | |
| இலங்கை வங்கி குத்தகை தவணை | 124,381 | | | |
| இலங்கை வங்கி குத்தகை வரி | 9,611 | (133,992) | (133,992) | |
| | | 11,166 | 145,158 | |
| ஐய வட்டி | 35,405 | | | |
| வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | (25,793) | 9,612 | 35,405 | |
| | | 1,554 | 109,753 | |
| 3 மிட்சுபிஷி எஸ் 300 வேன் பீ.டீ. 0578 | | 2,320,411 | 2,359,740 | |
| கழிக்கப்பட்டது: வருடத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | | (471,948) | (39,329) | |
| | | 1,848,463 | 2,320,411 | |
| கழிக்கப்பட்டது: நடைமுறை பொறுப்புக்கு மாற்றம் செய்தது | | | | |
| இலங்கை வங்கி குத்தகை தவணை | 315,599 | | | |
| இலங்கை வங்கி குத்தகை வட்டி | 156,349 | (471,948) | (471,948) | |
| | | 1,376,515 | 1,848,463 | |
| ஐய வட்டி | 517,232 | | | |
| வருடத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | (191,870) | 325,362 | 517,232 | |
| | | 1,051,153 | 1,331,231 | |
| மொத்தம் | | 1,375,041 | 1,986,497 | 739,618 |
| 27" வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை | | | | |
| வியாபாரத்திற்காக செய்யவேண்டிய கொடுப்பனவுகள் (அ) | | 176,098,350 | 163,352,984 | 89,102,433 |
| குத்தகை கடனாளர்கள் (ஆ) | | 954,864 | 954,864 | 348,924 |
| | | 177,053,214 | 164,307,848 | 89.451,357 |

| 2012 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது | ரூ | ரூ | ரூ |
| 27 (அ) வியாபாரத்திற்காக மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகள் | | | |
| வியாபார கடன்கொண்டோர் | 106,431,355 | 116,665,200 | 42,695,745 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 6,559 | 202,455 | 173,895 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | - | 24,295 | 141,117 |
| மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் பட்டா | 41,396 | 49,322 | 32,144 |
| அச்சு மற்றும் காகிதாதி | - | 65,350 | - |
| சனக சங்கம் | 43,120 | 43,120 | 43,120 |
| தொலைபேசி செலவு | 33,369 | 40,837 | 54,769 |
| நீர் | - | 6,800 | - |
| மின்சாரம் | 637,365 | 347,365 | 203,013 |
| செலுத்தவேண்டிய காரியாலய வடிவமைப்பு செலவு | - | - | 25,000 |
| விற்பனை ஊக்குவிப்பு கொடுப்பனவு | 386,808 | 457,767 | 288,617 |
| சேர்க்கப்பட்ட பெறுமதிக்கான வரி | 54,974,145 | 35,917,495 | 40,673,595 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 10,730,024 | 7,945,568 | 3,836,641 |
| பிடித்துவைத்தல் வரி | - | - | 8,458 |
| செலுத்தவேண்டிய கட்டிட வாடகை | 900,000 | 900,000 | 900,000 |
| பொருளாதார சேவை கட்டணம் | 313,858 | 635,592 | |
| மெட்ரோ பொலிடன் காரியாலயம் | - | - | 26,320 |
| கணக்காய்வு கட்டணம் | 30,000 | 30,000 | |
| எரிபொருள் | 20,351 | 21,818 | |
| வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு (வாகனம்) | 1,550,000 | | - |
| | 176,098,350 | 163,352,984 | 89,102,433 |
| (ஆ) குத்தகை கடனாளர்கள் | | | |
| இலங்கை வங்கிக்கு செலுத்தவேண்டிய கொடுப்பனவு க்ரோ வேன் பீபீ. 9583 | 959,541 | 1,308,465 | 1,657,389 |
| கழிக்கப்பட்டது: | | | |
| செலுத்தவேண்டிய இலங்கை வங்கி வரித் தவணை | (256,412) | (223,093) | (859,375) |
| செலுத்தவேண்டிய இலங்கை வங்கி வரி வட்டி | (92,512) | (125,831) | (449,090) |
| | 348,924 | 348,924 | 348,924 |

| 201 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது | ரூ | ரூ | ரூ |
| இலங்கை வங்கிக்கு செலுத்தவேண்டிய கொடுப்பனவு பஜாஜ் முச்சக்கர வண்டி வை.கே 3144 | 145,158 | 279,150 | |
| செலுத்தவேண்டிய இலங்கை வங்கி குத்தகை தவணை | 124,382 | (108,199) | |
| செலுத்தவேண்டிய இலங்கை வங்கி வரி வட்டி | 9,610 | (25,793) | |
| | 133,992 | 133,992 | |
| இலங்கை வங்கிக்கு செலுத்தவேண்டிய கொடுப்பனவு மிட்சுபிஷி எல் 300 வேன் பீ.டீ - 0578 | 1,848,463 | 2,320,411 | |
| செலுத்தவேண்டிய இலங்கை வங்கி குத்தகை தவணை | 315,599 | (280,078) | |
| செலுத்தவேண்டிய இலங்கை வங்கி வரி வட்டி | 156,349 | (191,870) | |
| | 471,948 | 471,948 | |
| மொத்தம் | 954,864 | 954,864 | 348,924 |

28. தொடர்புபட்ட நபர்களை வெளிப்படுத்தல் (எஸ்.எல்.ஏ.எஸ்.30)

| பெயர் | பதவி | தொடர்புடைய நவர்களின் கொடுக்கல் வாங்கல் தன்மை | முகவரி |
|---|---|---|---|
| 01. பிரதீப் எதிரிசிங்கஹ | தலைவர் | இல்லை | இல 283/7 காலி வீதி கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03 |
| 02. ஈ.எம்.ஏ.ஆர்.ஏக்கநாயக்க | பொது முகாமையாளர் | இல்லை | இல 220, கெமுனு மாவத்தை, ராஜகிரிய |

2012 நிதியாண்டுக்காக செலசினே தொலைக்காட்சி நிறுவனம் மற்றும் மேற்குறிப்பிடப்படும் நபர்கள் மற்றும் நபர்களின் குடும்ப அங்கத்தவர்களுடன் தொடர்புடைய பிரிவினருடன் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்படவில்லை.

# 2012 ஆம் வருடத்தின் நிதி தொழிற்பாடுகள் தொடர்பான கணக்காய்வாளரின் கருத்து

2012 வருடத்தின் நிதிகூற்று தொடர்பாக கணக்காய்வாளர் அறிக்கையில் இந்நிறுவனம் தொடர்பாக கணக்காய்வாளரினால் முன்வைக்கப்பட்ட கருத்து கீழ் காட்டப்பட்டுள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலசினெ தொலைக்காட்சி நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசோட்டத்தினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

கணக்காய்வாளரினால் எமது நிறுவனம் தொடர்பாக கூறப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட கருத்தானது 30 வருடங்களின் பின்னர் அடுத்தடுத்து இந்நிறுவனம் பெற்றக்கொண்ட பாரிய வெற்றி என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதுடன் இவ்வாறான கருத்தொன்றை பெற்றுக்கொள்வதற்கு உதவியளித்த நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரதீப் எதிரிசிங்ஹ
தலைவர்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதித்திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: ரீஎம்/ஈ/எஸ்சீரீஜ/எப்ஏ/2012
ඔබේ අංකය / உமது இல / Your No.
දිනය / திகதி / Date: 2013 யூன் 21

தலைவர்,
செலசினெ தொலைக்காட்சி நிறுவகம்

**செலசினெ தொலைக்காட்சி நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

செலசினெ தொலைக்காட்சி நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. செலசினெ தொலைக்காட்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவத்தால் தீர்மானிக்கப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு

இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 நிறுவகத்தினை ஸ்தாபித்தல்

இந் நிறுவகத்தினை 2001 திசெம்பர் 20 ஆந் திகதி வெகுசனத்தொடர்பு அமைச்சிடம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் குறிக்கோள்கள், செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்களை அமுலாக்குவதற்கு அதிகாரச்சட்டத்தினாலோ அல்லது வேறு எவ்வித சட்டத்தினாலோ ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந் நிறுவகம் "செலசினெ லிமிடட்" என கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் ஒரு பொதுக் கம்பனியாகப் பதிவுசெய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலசினெ தொலைக்காட்சி நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசோட்டத்தினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 திக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணங்களுக்கும் கட்டிட வாடகைக்கும் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது இலவசமாக ஒப்படைக்கப்பட்டிருந்த க்ரூ கப் வாகனம் மீளாய்வாண்டின் போது ரூபா 1,550,000 இற்கு மதிப்பிடப்பட்டு சொத்துக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் அம் மதிப்பீட்டுப் பெறுமதி வெகுசனத் தொடர்பாடல் அமைச்சிற்குச் செலுத்தப்பட வேண்டிய பணமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது முதலீடு செய்யப்பட்ட ரூபா 20 மில்லியன் தொகையான வைப்பிற்கான வட்டி வருமானத்தைக் கணிப்பிட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக் கடன் சீராக்கத்திற்கு முன்னர் கடன்பட்டோர் மீதி ரூபா 128,243,987 ஆன போதிலும் 2012 சனவரி 01 ஆம் திகதி கடன்பட்டோரின் பேரேட்டுக் கணக்கிற்கு ஆரம்ப மீதியாக ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக் கடன் சீராக்கிய பெறுமதியான ரூபா 124,962,586 எடுக்கப்பட்டிருந்தது. மேலும், 2012 ஆம் ஆண்டின் போது ஐயக்கடன் ஒதுக்கமாக ரூபா 6,219,283 தெகையான ஐயக் கடன் கணக்கின் மூலம் சீராக்கப்படாது ஐயக் கடன் பதிவழிப்பாக வருமானத்திற்கு எதிராகச் சீராக்கப்பட்டிருந்தது. கடன்பட்டோருக்காக ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக் கடன் ஒதுக்கத்திற்காக பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் விற்பனைகள், விற்பனைப் பேரேட்டின் பிரகாரம் ரூபா 436,802,868 ஆகக் காணப்பட்டதுடன் பிரதான பேரேட்டில் விற்பனைக் கணக்குகளின் பிரகாரம் இது ரூபா 437,939,421 ஆகக் காணப்பட்டன. இதன் பிரகாரம், விற்பனைகளில் ரூபா 1,136,553 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) கடன்பட்டோர் பட்டோலைகளுக்கும் கடன்பட்டோர் பேரேடுகளுக்கும் இடையே ரூபா 183,230 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(இ) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கடன்பட்டோர் பேரேட்டின் பிரகாரம் தனியான கடன்பட்டோரின் ஆரம்ப மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 56,439,633 ஆகவும் கடன்பட்டோர் பேரேட்டின் ஆரம்ப மீதி ரூபா 128,243,987 படி ரூபா 71,804,354 தொகையான வேறுபாடு காணப்பட்டது. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் பட்டோலையின் பிரகாரம் ரூபா 9,845,775 கூட்டுத்தொகையான 20 கடன்பட்டோர் மீதிகள் கடன்பட்டோர் பேரேட்டின் தனியான கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கடன்பட்டோர் பட்டோலையின் படி 99 கடன்பட்டோர் மீதிகள் அவதானிக்கப்பட்ட போதிலும் 42 கடன்பட்டோர் மீதிகளுக்காக மீதிகளின் உறுதிப்படுத்தற் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 90 நாட்களைப் பார்க்கிலும் அதிகமான கடன்பட்டோர் மீதிகளின் பெறுமதி ரூபா 49,663,465 ஆகக் காணப்பட்டதுடன் இது மொத்தக் கடன்பட்டோரின் 40 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும் அக் கடன்பட்டோரில் ரூபா 6,611,743 கூட்டுத்தொகை 2006 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து வரும் மீதியாகக் காணப்பட்டது. பேரேட்டில் அம் மீதிக்காக தனியான பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டின் வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஆதனங்கள், பொறிகளும் உபகரணங்களும், பெறவேண்டிய தரகுப்பணம், தேசத்தைக்

கட்டியெழுப்பும் வரி முறையே ரூபா 106,431,355 , ரூபா 17,352,074, ரூபா 3,528,092, ரூபா 10,730,024 இற்காக முறையாகத் தயாரிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வு, பட்டோலை, மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு, பட்டோலைகள், வரிக்கோவைகள் போன்ற சான்றுகள் இருக்கவில்லை.

(ஆ) 2012 கணக்காண்டின் போது 364 நாட்குறிப்புகளின் மூலம் கணக்குகள் சீராக்கப்பட்டிருந்த போதிலும் அந் நாட்குறிப்புகளைப் பரீட்சிப்பதற்காக நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், உரிய கணிப்பீடுகள் மற்றும் துணை ஆவணங்கள் போன்றவை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அந் நாட்குறிப்புக்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களின் சரியான தன்மை குறித்து பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2000 யூன் 27 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | ரூபா 2,500,000 பெறுமதியான நிலையான வைப்புக்களில் செய்யப்பட்ட முதலீடுகளுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ /12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 பிரிவு (ஈ) ஆம் பந்தி | நிறுவனத்தின் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரித்த பதவியணியினர் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

2012 ஆம் ஆண்டின் போது பெறுமதி சேர் வரிக்காக காலாண்டு ரீதியான வரி அறிக்கை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கான பணப்பெறுமதி ரூபா 18,613,695 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படாது நிறுவகத்தின் சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இக் கணக்கு மீதி ஐந்தொகையில் காசும் காசுக்குச் சமனானவைகள் எனும் விடயத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 4.3 பதவியணியினர் நிருவாகம்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 27 ஆக இருந்த போதிலும் 48 நபர்களைக்கொண்ட பதவியணியினர் காணப்பட்டதுடன் அதில் 15 நிரந்தரமாக்கப்பட்டவர்களும் 33 தற்காலிகமானவர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 4.4 வாகனப் பயன்பாடு

நிறுவகத்தினால் வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது 2003 மார்ச் 28 ஆம் திகதிய நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் எம்எப்/ரீஆர்/01/2003 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் வாகனம் வாடகைக்குப் பெறக்கூடிய ஆகக் கூடிய பெறுமதி ரூபா 40,000 ஆன போதிலும் இதற்கு முரணாக மாதாந்த வாடகை ரூபா 65,000 மற்றும் ரூபா 45,000 செலுத்தும் அடிப்படையில் இரு வாகனங்கள் பெறப்பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டின் போது இதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 1,185,000 ஆகக் காணப்பட்டது. இவ் வாகனம் வாடகை அடிப்படையில் பெறப்படுகையில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 தினங்களுக்குள் வரைவு ஆண்டறிக்கைகளும் நிதிக்கூற்றுக்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் செலசினெ தொலைக்காட்சி நிறுவகத்தினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு ஆண்டறிக்கை 2013 மே 31 ஆந் திகதியில் உள்ளவாறும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கூட்டுத் திட்டம்

2011 – 2013 ஆம் காலப்பகுதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டுத்திட்டத்தில் 2012 இல் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடாக தொலைக்காட்சி அலைவரிசையொன்றில் ஒரு மணித்தியாலம் அளவிலான ஒலிபரப்புக் காலம் ஒதுக்கப்பட்டு இதற்காக அரசாங்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினைக் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை, மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்ட போட்டிகளை நடாத்துதல் என்பன இனங்காணப்பட்ட போதிலும் அச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2012 ஆம் ஆண்டின் பாதீட்டைத் தயாரிக்கையில் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பாதீடு செய்யப்பட்ட வருமானங்களும் செலவினங்களும் தனித்தனியாக இனங்காணப்பட்டு முறைப்படியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய

போதிலும் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை ஆண்டறிக்கைகள் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 பணிப்பாளர் சபை

2012 ஆம் ஆண்டிற்காக பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பலவீனங்கள் அவ்வப்போது நிறுவனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன்பட்டோர்
(ஆ) வரிக் கொடுப்பனவு
(இ) நிலையான சொத்துப் பதிவேடுகளைப் பேணுதல்
(ஈ) கணக்கீடு

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**1.4 நிறுவனத்தினை நிறுவுதல்**
2012.10.05 ஆம் திகதி இடம்பெற்ற அரச வியாபார செயற்குழுவில் கலந்துரையாடப்பட்ட படி வரையறுக்கப்பட்ட நி-றுவனமாக ஸ்தாபிப்பதற்கான அறிக்கை கௌரவ அமைச்சரக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அது அமைச்சரவையின் அனுமதிக்காக,அமைச்சரவை கடிதத்தினை முன்வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2.2.1.கணக்கியல் குறைபாடுகள்**
அ)அமைச்சு செயலாளரின் MM 1/7/1/20 இலக்கமுடைய மற்றும் 2013.02.14 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்திற்கமைய 613396 இலக்கமுடைய காசோலையின் ஊடாக ரூ.96,904 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு 2000-2010 ஆம் ஆண்டு வரையான அனைத்து கணக்காய்வு கட்டணங்களும் தீர்க்கப்பட்டுள்ளது.2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் பற்றுச்சீட்டு கிடைக்கப்பெறாததினால் கட்டணம் செலுத்தப்படவில்லை.பற்றுச்சீட்டு கிடைக்கப்பெற்ற உடனேயே அக்கட்டணங்கள் செலுத்தி முடிக்கப்படும்.கட்டிட வாடகை,கொடுப்பனவு அல்லது வாடகை ஒப்பந்தம் இல்லாததினால் ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கான தேவை ஏற்படவில்லை.
ஆ)கடந்த வருடம் கணக்காய்வில் சுட்டிக்காட்டிப்பட்டுள்ளதன் படி இவ்வாகனம் மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்கணக்கிற்கு கொண்டு வரப்பட்ட போது அதற்கு ஒப்பாக உள்ளடக்கப்பட வேண்டிய வைப்புக்குறிப்பினை உள்ளடக்குவதற்கு வேறு வழி இல்லாததினால் அமைச்சின் உரிமையாக கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.இதன் உண்மைத்தன்மையை மீள் பரிசீலனை செய்து திருத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
இ)இதற்கான வட்டி வருடத்தினுள் வங்கிக்கணக்குகளிற்கு உள்ளடக்கப்பட்டு,அம்மீதி சான்றிதழ் கணக்கு அறிக்கை தயாரிக்கப்பட்ட பின்னரே கிடைத்தமையால் ,வட்டி கணக்கிடப்பட்டு கணக்கில் வரவு வைக்கப்படவில்லை.அது அடுத்த கணக்கறிக்கையில் கணக்கீடு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
ஈ)நிகழ்கால நிறுவன கணக்குக் கொள்கைக்கமைய அறவிடமுடியாக்கடன் ஒதுக்கீடுகளை மேற்கொண்டு கடன்பட்டோரிலிருந்து குறைத்து காட்டப்பட்டுள்ளதினால் கடந்த வருடங்களில் இருந்து அறவிடமுடியாக்கடன் மொத்த கணக்கு திறக்கப்பட்டிருக்கவில்லை.எனவே நிகழ்கால வருடத்தில் அதே போல் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.எனினும் 2012 ஆம் வருடத்தில் ஒதுக்கப்பட்ட அறவிடமுடியாக்கடன் ஒதுக்கீடுகளுக்காக அறவிடமுயாக்கடன் கணக்கு திறக்கப்பட்டு எதிர்வரும் வருடங்களில் இருந்து முன்கொண்டு செல்வதற்கு கணக்கு திருத்தப்படும்.

**2.2.2.சமப்படாத நிர்வாகக் கணக்கு**
அ.விற்பனைக்கணக்கின் படி விற்பனைப் பெறுமதியான ரூ.437,936,44 என்பது சரியானது.அது மற்றைய பொருத்தமான அனைத்து கணக்குகளுடன் பொருந்துகின்றது.சுட்டிக்காட்டப்பட்டுள்ள வேறுபாடு பேரேட்டில் உள்ளடக்கப்பட்ட கனணி வருடாந்த அறிக்கையில் உள்ள வேறுபாட்டினால் ஆகும்.கனணி பிழையினை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
ஆ.மொத்த கணக்கு 5 ஆரம்ப மீதியின் வேறுபாட்டினால் இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளது.அதனால் கணக்கறிக்கையில் சரியாக காட்டப்பட்டுள்ளது.அவ் ஆரம்ப மீதியின் வேறுபாட்டிற்கான காரணத்தினை திருத்தி மிகவிரைவில் மீண்டும் அறிக்கையிடப்படும்.
இ.கடன்பட்டோர் பேரேடு மொத்த கணக்குகள் சிலவற்றில் மட்டும் ஆரம்ப மீதி உள்ளடக்கப்படவில்லை. அதற்கான காரணம் புதிய கனணி திட்டங்கள் ஆரம்ப கடன்பட்டோர் மீதியுடன் சமப்படவில்லை என்பதாலாகும்.புதிய கனணி நிகழ்ச்சித்திட்டத்தின் குறையே இதற்கான காரணம் என்பது அறியப்பட்டுள்ளது.வேறுபாட்டிற்கான காரணம் அதுவாகும்.எனினும் வருட முடிவில் அனைத்து கடன்பட்டோர் மீதியினை சரியாக கனணி நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கின்றது. இது தொடர்பாக இந்நிகழ்ச்சியினை தயாரித்த நிறுவனத்திற்கு தெரியப்படுத்தி அது தொடர்பாக ஆராய்ந்து நிகழ்ச்சித்திட்டத்தினை திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.அது முடிவுற்ற பின்னர் உடனடியாக கடன்பட்டோர் பேரேட்டினை சரியான முறையில் தயாரித்து ஒரு மாதத்திற்குள் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படும்.

**2.2.3-கிடைக்க வேண்டிய கணக்குகள்**
அ.2012.12.31 ஆம் திகதிக்கு கடன்பட்டோரின் இறுதி மீதிகளில் சில தெளிவுபடுத்தல்களை காணக்கூடியதாகவுள்ளது.மீண்டும் பரீட்சிக்க வேண்டிய கடன் மீதிகள் விடுத்து மற்றைய அனைத்து கடன் மீதிகளுக்காக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதன்படி கனணி குறிப்புக்கள் அடிப்படையில் மீதியினை உறுதிப்படுத்திக்கொள்ள மற்றும் உறுதிப்படுத்தப்படாதவை சரிப்படுத்தப்பட்டுள்ளது.
ஆ)இம் மீதி பல வருடங்களாக கணக்கில் காட்டப்படுவதுடன் அது தொடர்பாக எவ்வித விபரங்களையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என 2012.10.05 ஆம் திகதி அரச வியாபார செயற்குழு விவாதத்தில் தெளிவுபடுத்தப்பட்டது. அதன்படி

இம்மீதியினை நீக்குவதற்காக அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.எனவே மிகவிரைவில் கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து இம்மீதி நீக்கப்படும்.

இ)2011 ஆம் வருடத்தில் கணக்கு தயாரிக்கப்பட்ட பழைய கணக்கியல் கட்டமைப்பிற்கு பதிலாக 2012 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து புதிய கணக்கியல் கட்டமைப்பு நிறுவப்பட்டது.அதன்படி சில திருத்தப்பட்ட தரவுகள் 2012ஆம் வருடத்தின் ஆரம்பத்திலிருந்து புதிய கணக்கியல் கட்டமைப்பிற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.அதனால் இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளது.இது தொடர்பான பூரண அறிக்கை மிகவிரைவில் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படும்.

**2.2.4-கணக்காய்விற்கான சாட்சியின்மை**

அ)வியாபாரக் கடன் கொண்டோர்- கடன் கொண்டோர் பேரேடு உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.கடன்கொண்டோர் ஆவணம் ஒரு மாதத்திற்குள் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படும்.

சொத்து மதிப்பிடல் மற்றும் உபகரணங்கள்- இவ் வகைப்படுத்தல்கள் இறுதிக்கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.அதில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளினதும் இருப்பு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.இதற்கு மேலதிகமாக இக்கொள்வனவுகள் தொடர்பான கோப்புக்கள் சரியான முறையில் முன்வைக்க முடியும்.நிலையான சொத்து ஆவணம் 2012.04.11 ஆம் திகதி கணக்காய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிடைக்க வேண்டிய தரகு- இது EDB நிறுவனத்திற்கு மட்டும் வழங்கப்பட்ட பத்திரிகை விளம்பரங்களுக்காக லேக்ஹவுஸ் நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய தரகுத் தொகையாகும்.அதற்கான பத்திரிகை விளம்பரம் கனணி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.இதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்க முடியும்.

பிணை வைப்புக்கள்-இதற்கான சாட்சி மற்றும் ஒப்பந்தம் 2012.04.10 ஆம் திகதி விசாரணைக்காக பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.இதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்க முடியும்.

தேய்மானங்களை ஒதுக்கீடு செய்தல்-நிறுவனத்தின் கணக்குக்கொள்கைக்கமைய தேய்மான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் கணக்கு அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட தெளிவுபடுத்தல் 3.5 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.இதற்கு மேலதிகமாக தேய்மானம் தொடர்பான விபரங்கள் அடங்கிய ஆவணம் 2013.04.01 ஆம் திகதி கணக்காய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தேசத்தினை கட்டியெலுப்பும் வரி-குறிப்பிட்ட தேசத்தினை கட்டியெலுப்பும் வரி தொடர்பாக ஆவணங்கள் உள்ளன.அவற்றினை சமர்ப்பிக்க முடியும்.

ஆ.கடந்த வருடங்களில் கணக்கு வைக்கப்பட்ட பேரேடு குறிப்புக்குளுக்காக சான்றுச்சீட்டு உள்ளடக்கப்படாமையினால்,அது தொடர்பாக அறிந்திருக்காமையால் இத்தாமதம் ஏற்பட்டுள்ளது.எனினும் 2012ஆம் வருடத்திலிருந்து பேரேடு குறிப்புகளுக்காக தலைவரின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.மிக விரைவில் அக்குறிப்புகளுக்காக பேரேடு சான்றுச்சீட்டினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.2013 ஆம் ஆண்டிலிருந்து பேரேடு குறிப்புகள் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் சான்றுச்சீட்டினை இணைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**2.2.5சட்டதிட்டங்கள் மற்றும் முகாமைத்துவ முடிவுகளுக்கு இனங்காமை**

அ.2012.06.18 ஆம் திகதி செயலாளரின் தலைமையில் அமைச்சில் இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தில் பெறப்பட்ட ஆலோசனைகளுக்கமைய நிலையான வைப்புக்கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டது. SE/ACC/3/DPST/1 இலக்கமுடைய மற்றும் 2011.02.11 திகதியுடைய கடிதம் மற்றும் 2013.02.19 ஆம் திகதியுடைய கடிதங்களில் வியாபார திணைக்களத்தினை தெளிவுபடுத்தி இது தொடர்பான அனுமதியினை வழங்குவதற்கான கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆ)பொது நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்ட உடன் அமைப்புத்திட்டம் அரச வியாபார திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.பணிக்குழு அனுமதிக்காக முகாமைத்துவ திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அது சம்பள ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடல் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.அவ்வனுமதி கிடைத்த உடன் அரச வியாபார திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இ.நிலையான சொத்துப் பேரேடு மற்றும் நிலையான சொத்து ஆவணம் 2013.04.10 ஆம் திகதி கணக்காய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஈ.கனணி உபகரண ஆவணம்,குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் படி தயாரிக்கப்பட்டு 2013.04.11 ஆம் திகதி கணக்காய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

SELACINE TELEVISION INSTITUTE

**3.நிதி பகுப்பாய்வு**

**3.1 நிதி முடிவுகள்**

கடந்த காலகட்டத்தில் இடம்பெற்ற இடர்களை நீக்கி நிறுவனத்தின் ஒட்டுமொத்த திட்டத்தினை சரியான முகாமைத்துவத்தின் மூலம் இவ்வளர்ச்சி பெற்றுக்கொள்ளப்பட்டது.

**3.2நிறுவனத்திற்கு எதிராக அரம்பிக்கப்பட்டுள்ள வழக்குகள்**

1.2008 தேசத்திற்கு மகுடம் நிர்மாணங்களுக்கான இரு நிறுவனங்களுக்கெதிராக வணிக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

2.நான்கு ஊழியர்கள் தொடர்பாக வழக்கு இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

**4.தொழிற்பாட்டு பகுப்பாய்வு**

**4.1 தொழிற்பாட்டு**

வருமானம் 184% வீதத்தினால் வளர்ச்சியடைந்ததானது மூலம் மனித வளம் மற்றும் நிதி முகாமைத்துவத்தின் திறன்களை வெளிக்காட்டுகின்றது.

**4.2.முகாமைத்துவ குறைபாடுகள்**

இந்நிறுவனத்தின் இருப்பு தொடர்பாக இருந்த நிச்சியமற்ற தன்மையினால் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிப்பணம் எவ்வாறான சந்தர்ப்பத்திலும் செலுத்துவதற்கு ஏற்ற வகையில் அரச வங்கியான இலங்கை வங்கியில் சேமிப்புக்கணக்கொண்றில் வைப்பிலிடப்பட்டுள்ளது.இது தொடர்பாக தேசிய வருமான ஆணையாளர் நாயகத்துடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**4.3 பணிக்குழு நிர்வாகம்**

துற்போது அனுமதிக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பணிக்குழுவானது 27,2003 ஆம் ஆண்டு அனுமதியளிக்கப்பட்டதாகும். அதில் தற்போது நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 15 ஆகும்.2003 ஆண்டினை விட நிகழ்காலத்தில் நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் பொறுப்புக்கள் விரிவடைந்துள்ளது.வருமானம் 184% வீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளமை அதற்கான பொருத்தமான சாட்சியாகும்.அதனால் தற்காலிக ஊழியர்களை இணைத்துக்கொண்டு நிறுவனத்தின் செயற்பாடுகள் முன்னேடுக்கப்பட்டது.நிறுவனத்தின் நிகழ்கால செயற்பாடுகளுக்கு பொருத்தமானதாக ஊழ-ியர் குழாமை அதிகரிப்பதற்கு முகாமைத்துவ திணைக்களத்திற்கு மற்றும் சம்பள முரண்பாட்டுக் குழுவுடன் சில பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டது என்பதுடன் அதற்கான தீர்வுகள் மிக விரைவில் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**4.4.வாகன பாவனை**

தலைவருக்காக உபபோகித்த வாகனம் திடீரேன நிறுத்தப்பட்டமையால் மிகவும் அவசரமாக தலைவருக்கு வாகனமொன்றினை பெற்றுக்கொடுக்க வேண்டியிருந்தமையால் தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் விபரங்களின் அடிப்படையில் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.இந்நிறுவனத்தின் அனைத்து செலவுகளும் நிறுவனத்திற்கு கிடைக்கும் வருமானத்தின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது.அரசாங்கத்தினால் எவ்வித ஒதுக்கீடுகளும் நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறுவதில்லை.இவ்வாறாக வருமானம் உழைக்கும் நிறுவனம் என்ற வகையில் உயர் மட்ட பதவிக்கு பொருத்தமான போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளதினால் மற்றும் மிக விரைவாக அதனை மேற்கொள்ள வேண்டியுள்ளதினால் ,தொலைபேசி மூலமாக பெற்றுக்கொள்ளப்பட்ட விலை அடிப்படையில் பதவிக்கு பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டதினால் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.பொது முகாமையாளரின் வாகனம் செப்டேம்பர் மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

**5.கணக்கு நடவடிக்கைகள் மற்றும் சிறந்த நிர்வாகம்**

**5.1 நிதியறிக்கையினை சமர்ப்பித்தல்**

கடந்த வருடங்கள் இருந்த இறுதி நிதியறிக்கையினை சமர்ப்பிப்பதில் இருந்த தாமதங்கள் முற்றாக களையப்பட்டு 2013.03.28 திகதி 2012 ஆம் வருடத்திற்கான நிதியறிக்கை கணக்காய்விற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிதியறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித்தினமான 2013.02.28ஆம் திகதி நிதியறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதினாலும்,பிரதான கணக்கறிக்கை அத்தினமே சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேவையினாலும் ,அச்சந்தர்ப்பத்தில் காசுப்பாய்ச்சல் சமப்படாததினாலும் பிரதான நிதியறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டது.அதற்கு சில தினங்களிற்கு பின்னர் காசுப்பாய்ச்சல் கூற்றும் சரியான முறையில் தயாரிக்கப்பட்டு உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**5.2.செயற்பாட்டுத்திட்டம்**

1.இது 2012 ஆம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கூடத்தில் மேற்கொள்ளப்பட்டது.

2.இது பணி தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக அலைவரிசை நேரத்திற்கான அனுசரனையை பெற்றுக்கொள்ளுதல்,கண்டுபிடித்தல் சிரமானது.இதனை செயற்படுத்துவதற்கு தேவையான விடயங்களை மேற்கொள்வதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3.இதற்காக அனுசரனையாளர்களை பெற்றுக்கொள்வதில் இடர்கள் ஏற்பட்டுள்ளது.இருப்பினும் அதற்காக குறிப்பிட்ட பிரிவினருடன் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

**5.3 வரவுசெலவு ஆவண நிர்வாகம்**

2012ஆம் வருடத்தின் வருமானத்திற்காக அவ்அவ் பிரிவுகளுக்கு வேறுவேறாக வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. வருடாந்த செலவுகள் வரவு செலவு ஆவணமும் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனையும் சமர்ப்பிக்க முடியும்.அதன்படி ஒவ்வொரு மாதமும் வளர்ச்சி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு இடர்கள் சரிசெய்யப்பட்டு வருடத்தின் வருமானம் மற்றும் இலாபத்தில் கருத்திற் கொள்ளக்கூடிய வளர்ச்சி பெற்றுக்கொள்ளப்பட்டது.

**5.4 வருடாந்த அறிக்கையினை சபைப்படுத்தல்**

2010 ஆம் ஆண்டு ஆண்டறிக்கை அமைச்சரவையினால் அமைச்சு சபையின் 12/1770/537/025 இலக்கமுடைய பத்திரத்தினால் அனுமதியளிக்கப்பட்டதன் பிரகாரம் சபைப்படுத்தலுக்காக 2013.02.13 ஆம் திகதி கௌரவ சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.2011 வருடாந்த அறிக்கை அனுமதிக்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

**5.5 பணிப்பாளர் சபை**

2013 ஏப்பிரல் மாதம் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளது.

**6.கட்டமைப்பு மற்றும் நிர்வாகம்**

அ)கடன்பட்டோர்

2011 ஆம் வருடத்தினை விட 2012 கடன்பட்டோர் மீதி 6.7 மில்லியன் ரூபாய்களாக குறைக்கப்பட்டுள்ளது.அது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 5.4% வளர்ச்சியாகும்.மேலும் வளர்ச்சியினை அதிகரித்துக்கொள்வதற்காக கடன்களை வசூலிப்பதற்கு தனியான உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.அதன் படி இவ்வருடத்தின் சிறந்த வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஆ.வரி செலுத்துதல்**

பொருளாதார கட்டணங்கள் சரியான முறையில் தேசிய ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 2012 ஆம் ஆண்டு காலாண்டு வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.தேசிய வருமான ஆணையாளர் நாயகத்துடனும் இது தொடர்பாக பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் படி நிறுவத்தின் இருப்பு நிலை உறுதியாக்கப்பட்டதன் பினன்ர் குறிப்பிட்ட வரியினை செலுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.எவ்வித தடைகளுமின்றி இவ்வரியினை செலுத்துவதற்கு முடியுமானதாகவுள்ளது.

**இ)நிலையான சொத்து ஆவணத்தினை பராமரித்தல்**

2011 ஆம் வருடத்தில் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன் படி நிலையான வைப்பு ஆவணம் தயாரிக்கப்பட்டு 2013.04.10 ஆம் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.அதிலுள்ள சிறிய குறைபாடுகள் தொடர்பாக கணக்காய்வினால் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய நிலையான சொத்து ஆவணம் சரியான முறையில் பராமரிக்கப்படுகின்றது.

**ஈ)கணக்கு வைத்தல்**

கடந்த காலகட்டத்தில் இருந்த குறைபாடுகளை ஆராய்ந்து முறையான கணக்குக் கட்டமைப்பு நிறுவப்பட்டுள்ளது.அதன் மூலம் அனைத்து கணக்கறிக்கைகளையும் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.அதன்படி இவ்வருடத்தில் சரியான தினத்தில் கணக்கறிக்கை குறிப்பிட்ட இறுதித்தினத்திற்கு முன்னர் சரியான முறையில் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இதன்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலதாமதம் தீர்க்கப்பட்டுள்ளது என்பதுடன் இக்குறைபாடுகளை தவிர்த்துக்கொள்வதற்காக அதிகாரிகளுடன் கலந்துரையாடி தகுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதினால் இவ்விடயங்களை இறுதி அறிக்கையில் சேர்க்க வேண்டாம் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பிரதீப் எதிரிசிங்ஹ
தலைவர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்.




සැලසිනෙ
செலசினே
SELACINE
TELEVISION INSTITUTE

SLBC Training Institute Building, Independence square, Colombo 07, Sri Lanka.
Tel: +94-11-2688744
Fax: +94-11-2688745
E-mail: selacine@gmail.com
www.selacine.lk